விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 13 செவ்வாய்க்கிழமை (26.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 038

சிறப்பு சலுகை
January 31ஆம் திகதி வரை மட்டுமே
ஆரோக்கியா
பல் வைத்தியசாலையின்
விசேட கட்டண சலுகையை
பெற்றுக்கொள்ள
இன்றே விரைந்திடுங்கள்.
(5389)
Petrol Shed Lane, Nelliyady.
074 070 2241, 075 975 9828

### தமிழருக்கு எதிரான நடவடிக்கையே

## ஆயுதப் போராட்டத்துக்கு காரணம் என ஐ.நா ஏற்றுக் கொண்டுள்ளது

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



(யாழ்ப்பாணம்)

தமிழருக்கு எதிராக அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாகவே ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்றது என்பதை ஐ.நா ஏற்றுக் கொண்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் 19

## யாழில் இடம்பெற்ற இரு வேறு விபத்து

### இருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெற்ற இரு வேறு விபத்துக்களில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இருவர் 19

### இந்திய மீனவர்கள்

## நீதிமன்றால் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் மூவருக்கு ஒத்தி வைக்கப்பட்ட கடூழியச் சிறைத் 19

### யாரும் உணராத விதத்தில்

# இராணுவ மயமாக்கலை நோக்கி நாடு செல்கிறது

### முன்னாள் நீதியமைச்சர் தலதா அத்துக்கோரல குற்றச்சாட்டு



(கொழும்பு)

யாரும் உணராமல் நாடு வேகமாக இராணுவ மயமாக்கலை நோக்கி செல்கிறது என முன்னாள் நீதியமைச்சரும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துகோரல குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர், குறிப்பாக உள்துறை அமைச்சு நேரடியாக 19

### புதுக்குடியிருப்பில் கரடி தாக்கியதில்

## குடும்பஸ்தர் படுகாயம்

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியில் வயல் வேலைக்கு சென்ற விவசாயி கரடி கடித்ததில் காயமடைந்த நிலையில் 19

## கட்டடம் இடிந்து விழுந்ததில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### யாழ்.அளவெட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அளவெட்டிப் பகுதியில் பழைய கட்டடம் ஒன்றை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் தொழிலாளி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் 19

## எங்கள் விருப்பத்துக்கு மாறாக எமது காணிகளை சுவீகரிக்க முயற்சி

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மண்கும்பான் மக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகம் வேலணை - மண்கும்பான் ஜே11 கிராம சேவகர் பிரிவில் மக்களுக்கு சொந்தமான குடியிருப்பு மற்றும் தோட்ட காணிகள் 19

## பி.சி.ஆர் சோதனைக்கு ஒத்துழைக்க மறுப்பு

### பருத்தித்துறையில் வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு சீல்

(பருத்தித்துறை)

பி.சி.ஆர் பரிசோதனையை புறக்கணித்தமையால் வாகன சுத்திகரிப்பு 19

## இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து

### யாழ்.நகரில் நாளை மாபெரும் கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய செயற்பாட்டைக் கண்டித்து 19

## வசந்த யாப்பா எம்.பிக்கும் கொரோனா

(கொழும்பு)

ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் 19

### வடக்கில் நேற்றும்

## 8 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணம் மருத்துவபீட ஆய்வுகூடங் 19

## யாழ்ப்பாண பிரதேச செயலாளர் சுதர்சனுக்கு

### நேர்மைக்கு மகுடம் விருது



(யாழ்ப்பாணம்)

2020ஆம் ஆண்டில் இலங்கையின் ஊழலற்ற அதிகாரிகள் தேர்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் ஐவரில் ஒருவராக 19

## நாட்டில் மேலும் நால்வர் கொரோனாவுக்கு பலி

### நேற்றும் +737 தொற்றாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 4 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாக அரச ஊடகத்துறைதெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 287ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

# 54 ஆம் ஆண்டு பிறந்ததின நினைவலைகள்

அமரர்

## யோகறஞ்சினி நகுலேஸ்வரன்

(சுமதி)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26.01.1967 | 19.09.2019 |



நம்ப மறுக்குதம்மா எம் இதயம்
நீ பிரிந்து இரு வருடங்கள் சென்றாலும்
உன் அழகிய சிரிப்பும்
இனிமை நிறைந்த பேச்சும்
எல்லோரையும் ஈர்க்கும் உன்
வசீகரப் புன்னகையும்
உன் உடலை விட்டு உயிர் பிரிந்ததை
அறிந்து இதயமே உறைந்து போய்
நின்றதை யாரறிவார்?
நீ இறக்கவில்லை
எங்களுடன் உயிரோடுயிராய்
என்றுமே நிலைத்திருப்பாய்.



நெல்லியடி ம. மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி.

குடும்பத்தினர்

(C-1253)

# சீனாவை நம்பியே அரசாங்கம் ஜெனிவாவை நிராகரிக்கிறது- கிரியெல்ல

(கொழும்பு)

**ராஜபக்ஷ அரசாங்கம் பிரேரணையில் இருந்து வெளியேறினால் இலங்கை பாரிய நெருக்கடியை சந்திக்க நேரிடும் எனவும் அது பொருளாதார தடை வரையில் இலங்கையைக் கொண்டு செல்லும் என எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல எச்சரிக்கை விடுத்தார்.**



இலங்கையில் இடம் பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராயவும், உள்ளக ரீதியில் தீர்வுகளை எட்ட நல்லாட்சி அரசாங்கம் ஆரோக்கிய மான வேலைத்திட்டங் களை முன்னெடுத்தென வும், 2015 ஆம் ஆண்டு அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணைக்கு இலங்கை இணை அனுசரணை வழ ங்கியமை இதன் ஆரோக் கியமான முன்னகர்வு என் றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல் கள் குறித்து ஆராயவும், ஜெனிவா நெருக்கடிகளை சமாளிக்கவும் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றினை அமைத்துள்ள நிலையில் அதன் நோக்கம் குறித்தும், இலங்கை மீதான ஜெனிவா நெருக்கடிகள் குறித்தும் கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைக் கூறினார்.

யுத்த குற்றங்கள் இடம் பெற்றதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. இதில் இராணுவம் ஒட்டு மொத்தமாக இராணுவ குற் றங்களை செய்ததாக நாமும் கூறவில்லை. ஆனால் தனிப் பட்ட ரீதியில் இராணுவத் தில் ஒரு சிலர் குற்றங்களை செய்துள்ளனர். அதற்கான ஆதாரங்கள், நீதிமன்ற விசாரணைகள், சாட்சியங் கள் என பல உள்ளன.

இவ்வாறான நிலையில் ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த விசார ணையை ஏற்றுக் கொள் வதாகவும், உள்ளக ரீதியில் இதற்கான விசாரணை களை நடத்தி நீதியை நிலைநாட்டுவதாகவும் அப் போதைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சர்வதேசத்தி ற்கு வாக்குறுதிகளை வழங் கியுள்ளது. அந்த வாக்குறுதி களின் பிரகாரமே தொடர்ச்சி யாக மனித உரிமைகள் பேரவையில் பிரேரணை கள் முன்வைக்கப்பட்டு வரு கின்றன.

ராஜபக்ஷ அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வந்த தும் அவர்கள் பழைய தவறு களை செய்ய தயாராகி விட் டனர். 2015 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பிரேர ணையில் இருந்து அரசாங் கம் விலகிக்கொள்வதாக கூறியுள்ள நிலையில் ஐரோ ப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் அதற்கான எதிர்ப்பை வெளி ப்படுத்த ஆரம்பித்து விட் டன.

இந்த நிலைமை தொட ருமாயின் இலங்கை தனி த்து விடப்படுவதுடன், ஐரோ ப்பிய நாடுகளின் பொரு ளாதார தடைகளுக்கும் உள்ளாக நேரிடும். வெறு மனே சீனாவை மாத்திரம் நம்பிக்கொண்டு அரசாங் கம் எடுக்கும் முயற்சிகள் இலங்கையை மிகப்பெரிய நெருக்கடிக்குள் தள்ளப்போ கின்றது என அவர் மேலும் எச்சரித்தார். (ஐ-4)

# பொலிஸ் படைகளுக்கான சர்வதேச பயிற்சிகளை நிறுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை உட்பட அடக்கு முறையில் ஈடுபடும் படைகளு க்கான-பொலிஸ் பயிற்சித் திட் டங்களை நிறுத்துமாறு இங் கிலாந்து அரசுக்கு ஆயுத வர் த்தகத்திற்கு எதிரான பிரசாரம் என்ற அமைப்பு (Campaign Against Arms Trade) அழைப்பு விடுத்துள்ளது.


அத்துடன், பொலிஸ் கல் லூரி வழங்கும் அனைத்து சர்வதேசப் பயிற்சிகளையும் மதிப்பாய்வு செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.

2012 இல் கல்லூரி நிறுவப் பட்டதிலிருந்து குறைந்தபட்சம் 76 நாடுகளுக்கு பயிற்சி மற்றும் உதவிகளை வழங்கியுள்ள தாக ஆயுத வர்த்தகத்திற்கு எதிரான பிரசாரம் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், வெளிநாட்டு மற்றும் கொமன்வெல்த் அலுவலகத்தால் (Foreign & Commonwealth Office) மனித உரிமைகள் கவனிக்க ப்படும் நாடுகளாகப் பட்டியலி டப்பட்ட 12 நாடுகளுக்கும் இவ் வாறு பயிற்சி அளிக்கப்பட் டுள்ளது.

ஆப்கானிஸ்தான், பஹ்ரே யன், சீனா, கொலம்பியா, எகிப்து, லிபியா, பாகிஸ்தான், ருவாண்டா, சவுதி அரேபியா, சோமாலியா, இலங்கை மற்றும் சூடான் ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட, சித்திரவ தைக் குற்றச்சாட்டுக்கு உள் ளான பொலிஸ் படைகளைக் கொண்ட பல நாடுகளும் பட்டி யலிடப்பட்டுள்ளன. (ஐ-4)




**தமிழ்த்தேசிய கட்சிகள் இலங்கை அரசு மீது மட்டும் போர்க்குற்றச்சாட்டை முன்வைத்து ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் விசாரணைக்கு வலியுறுத்தும் நிலைப்பாட்டுக்கு எதிராக நேற்று யாழில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுப்பட்டது. இந்தப் போராட்டத் தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் தமிழ் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. போராட் டக்காரர் தாங்கிச் சென்ற பதாகைகளில் சிங்கள மொழி யிலான வாசகங்களும் உள்ளடங்கியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (படங்கள்-ஐ.சிவசாந்தன்)**

# கடற்படையிடமிருந்து காணியை பெற்றுத்தர கோரி தீவக மக்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம்-வேலணை பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட மண்கும்பான் 5 ஆம் வட்டாரத்திலுள்ள கடற் படை பிரதான முகாம் அமைந்துள்ள பொதுமக் களுக்குச் சொந்தமான 15 ஏக்கர் காணியினை விடு விக்குமாறு கோரி நேற்று காணி உரிமையாளர்க ளால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டுள் ளது.

கடந்த 30 வருடகால மாக தனியாருக்குச் சொந்த மான குறித்த 15 ஏக்கர் காணியில் தீவகத்திற்கான கடற்படையின் பிரதான முகாம் அமைக்கப்பட்டு காணி கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த காணியினை சுவீகரிப்பதற்குரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் குறித்த 15 ஏக்கர் காணி உரிமையாளர்கள் தமது காணியினை பெற் றுத் தருமாறு கோரி யாழ்ப் பாணம் மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப் பாட்டினை பதிவு செய்துள் ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ-4)

# ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் அணுகுமுறை தொடர்பில் பிரித்தானியா


(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறு தியாகி உயிரிழப்பவர்களை கட்டாயமாக தகனம் செய்வது உட்பட, இலங்கையுடனான மனித உரிமைகள் தொடர் பான பிரச்சினைகள் குறித்து பிரித்தானியா கவலை வெளி யிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான ஐ.நா. அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்பட உள்ளதாக பிரித்தானிய உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்து ள்ளார்.

இது குறித்து டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள அவர், குறித்த அறிக்கையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை யின் அணுகு முறை தொடர் பாகவும் தெரிவிப்பதாக குறிப் பிட்டுள்ளார். (ஐ-4)

# மரண அறிவித்தல்



## லயன் சபாபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

**( ஓய்வுபெற்ற உதவி விவசாய பணிப்பாளர் (ADA), சமாதான நீதவான் )**

தும்பளையைப் பிறப்பிடமாகவும் ஆத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட லயன் சபாபதிப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (25.01.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆனந்தநடராஜா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜெயலட்சுமியின் பாசமிகு அண்ணனும் காலஞ்சென்ற தேவநாயகியின் அன்புத் தம்பியும் சுஜந்தினி, சுஜந்தன், கஜந்தன், அஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரதாஸ், சிவாஜினி, சுதர்சினி, நாமலி ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருஷாந், நிஷாந், சுஜீவினி, சுஜீவன், சஜீவன், விதீஷன், தஸ்வின், அஜானா, வினிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.01.2021) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1259)

பாபாபனை,
ஆத்தியடி, பருத்தித்துறை.

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## தங்கம்மா ஆறுமுகம்

கோப்பாய் தெற்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கம்மா ஆறுமுகம் நேற்று (25.01.2021) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - பொன்னு தம்பதியரின் அன்பு மகளும் இளையவி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா, சின்னம்மா, அப்பாக்குட்டி, தம்பித்துரை ஆகியோரின் அன்பு சகோதரியும் குணபாலசிங்கம், தனபாலசிங்கம், விஜயகுமாரி (ஜேர்மனி), விஜயபாலசிங்கம் (நெதர்லாந்து), காலஞ்சென்ற பாலச்சந்திரன், ஜெயபாலசிங்கம் (இயக்குநர், ஆசிரியர் - வள்ளுவர் அக்கடமி), ராஜபாலசிங்கம் (ஆசிரியர் - புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வசந்தா, பிரேமா, சுந்தரலிங்கம் (ஜேர்மனி), ரதீஸ்வரி (நெதர்லாந்து), மைதிலி (ஆசிரியை- வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம்), கீர்த்தீபா (ஆசிரியை - யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஜா (ஆசிரியை - ஸ்ரீ புத்தூர் சோமஸ்கந்தா), நிவேதா (மாணவி - யாழ். பல்கலைக்கழகம்), நிதர்சனா (சட்டத்துறை மாணவி - கொழும்பு பல்கலைக்கழகம்), நிதுர்சன், அகர்சன், அகர்சா, வியூட்சன் (நெதர்லாந்து), வியூட்சிகா (நெதர்லாந்து), விதுர்ஷன் (ஜேர்மன்), ஆதித்தியன், திவ்வியடருண், குகதீசன் (வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்), ஆருதி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் அபூர்வாவின் (நெதர்லாந்து) அன்பு பூட்டியும் அவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.01.2021), செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1259)

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:-
குடும்பத்தினர்

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் மாணிக்கம் இராஜரட்ணம்

வாழும்வரை வாழ வைத்த தெய்வமே!
வழி எங்கும் தேடுகின்றோம் - அப்பா
உங்கள் வரவுதனை நோக்கி
சிவனடியில் சேர்ந்த உம் ஆத்மா
சாந்தியடைய சந்நிதியானை
வணங்குகின்றோம்.

அன்னை மடியில் : 17.09.1949
பரமனடியில் : 05.02.2018

திதி : வளர்பிறை சதுர்த்தசி

மானிப்பாய்
077 811 2890

(5398)

மனைவி,
பிள்ளைகள்.

# தொல்பொருள் அடையாளங்கள் சிதைக்கப்படுவதால் தமிழர்களின் வாழ்வுரிமை கேள்விக்குறி



(கிளிநொச்சி)

**தமிழர்களின் அடையாளங் களை ராஜபக்ஷ அரசு சிதைத்து தமிழர்களின் வாழ்வுரி மையை கேள்விக்கு உள்ளாக்குகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பி னர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

ஜெயந்தி நகர் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு நிகழ்வும் புலமைப்பரிசில் சித்தியடைந்த சாதனையாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று நடைபெற்றது. குறித்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எங்களை மாறி மாறி வருகின்ற ஒவ்வொரு சிங்கள அரசுகளும் சரி இப்போது இராணுவ சிந்தனையோடு ஜனாதிபதியாக இருக்கின்றவரும் சரி அவருக்கு கீழே இருக்கின்ற ஏனைய தரப்புக்களும் சரி இளைஞர்களை வேறு திசை நோக்கி கொண்டு செல்ல முயற்சிக்கிறார்கள். எங்களின் அடிப்படை வாழும் உரிமையையே ஆட்டம் காண வைத்திருக்கிறது.

இந்த அரசு எந்த நாளும் நிம்மதியற்ற சூழலில் விழிக்கின்ற சூழலை உருவாக்கி இருக்கின்றது.

இந்த நிலையில் தமிழ் இளைஞர்கள் உணர்வுகளுக்கு அப்பால் ஒரு இனம் பற்றிய சரியான சிந்தனையோடும் தமிழ்த் தேசிய இனமாக ஒரு தனித்துவ அடையாளத்தோடு எவ்வாறு வாழ்கின்றோம். எங்களுடைய தனித்துவங்கள் எவ்வாறாக பேணப்பட வேண்டும். ஏன் நாங்கள் இந்த மண்ணிலே இவ்வளவு காலமும் போராடினோம்? இவ்வளவு காலமும் இந்த மண்ணிலே எங்களுடைய வாழ்க்கையை பல நெருக்கடிகளுக்கு மத்தியில் கொண்டு சென்றோம் என்கிற எண்ணங்கள் இளையவர்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட வேண்டும்.

இன்று தன்னுடைய இருப்பை சரியாக தக்க வைத்துக் கொள்வதற்கும் அதற்காக சதா சிந்தித்து கொண்டு இருக்கின்ற இனமாக நாம் எங்களை மாற்ற வேண்டும்.

நாங்கள் கொஞ்சம் தமிழர்களாக சிந்தித்து விட்டோம் என்றால் எங்களை ஏமாற்றுபவர் வேறு ஒரு திசைக்கு எங்களை நகர்த்திச் சென்றால் அதில் இருந்து விடுபட்டு எங்கள் இலக்கின் பாதையிலே செல்கின்றவர்களாக நாங்கள் மாறவேண்டும்.

அரச நிறுவனங்கள் எல்லாம் ஒட்டுமொத்தமாக ஒரு தமிழ் சமூகத்திற்கு எதிராக இருக்கின்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எங்களின் கலாசார பண்பாடுகள் கூட கேள்விக்கு உட்படுத்தப்படுகிறது.

சிங்கள மொழியாலும் சிங்கள கலாசாரத்தாலும் சிங்கள அரசினுடைய அரச இயந்திரத்தினாலும் நாங்கள் கபளீகரம் செய்யப்படுகிறோம், திசை மாற்றப்படுகிறோம். ஒரு இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்படுகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# விபத்தில் ஒருவர் பலி


(கொழும்பு)

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு நோக்கிய அதிவேக நெடுஞ்சாலையின் கட்டணம் செலுத்தும் பகுதிக்கு அருகில் உள்ள இரும்பு வேலியுடன் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனால் அதிவேக நெடுஞ்சாலையில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# வவுனியா நகர் விடுவிப்பு



(நெளுக்குளம்)

வவுனியாவில் கொரோனா தொற்று அதிகரித்த நிலையில் தனிமைப்படுத்தல் ஊர டங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட வவுனியா நகர் நேற்று திங்கட்கிழமை விடுவிக்கப்பட்டது.

வவுனியா, பட்டாணிச்சூரை சேர்ந்த கர்ப்பிணிப் பெண் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து குறித்த கிராமம் முடக்கப்பட்டது.

அத்துடன் வவுனியா நகரப் பகுதியில் தொற்றாளர்கள் அதிகரித்து வந்த நிலையில், பிரதான நகரம் உட்பட 19 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு முடக்கப்பட்ட நிலையில், கடந்த 18ஆம் திகதி வவுனியா நகர மத்தி தவிர்ந்த ஏனைய பகுதிகள் விடுவிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்று மில் வீதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளன. (ஜ-299)

# சிறைச்சாலைகளில் தொற்றுறுதியானோரில் 151 பேர் சிகிச்சையில்

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியாகிய சிறைச்சாலைகளுடன் தொடர்புடைய 151 பேர் தற்போது தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 146 பேர் கைதிகள் என்றும் ஐந்து பேர் சிறைச்சாலைகள் அதிகாரிகள் என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகளுக்குள் இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியவர்களின் மொத்த எண்ணிக்கை 4,396 ஆக உள்ளது.

அவர்களில் 4,234 பேர் குணமடைந்துள்ளதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஜ-4)

# ராமர் பாலத்தின் மர்மங்கள் குறித்து ஆய்வு செய்ய இந்திய அரசு ஒப்புதல்

(கொழும்பு)

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் 48 கி.மீ நீளமுள்ள ராமர் பாலத்தின் தோற்றம் குறித்த ஆய்வினை மேற்கொள்வதற்கு இந்திய அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

ராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையே ராமர் பாலம் அமைந்துள்ளது. 48 கிலோமீற்றர் நீளம் கொண்ட சுண்ணாம்பு கற்களால் ஆன இந்த பாலம், பல மர்மங்களை தன்னுள் உள்ளடக்கியது.

ராமர் பாலம் எப்படி உருவானது என்பது குறித்து பல்வேறு கருத்துகள் நிலவி வருகின்றன.

இலங்கை அரசன் இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையை மீட்கச் சென்ற போது கடலை கடந்து செல்வதற்காக இந்த பாலம் அமைக்கப்பட்டது என்றும் ராமருக்காக வானர படையினர் அந்த பாலத்தை கட்டியதாகவும் புராணங்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக ராமர் பாலத்தை இந்துக்கள் புனிதமாக கருதுகின்றனர். இந்துக்களின் அடையாளமாகவும், நம்பிக்கை சார்ந்த விடயமாகவும் இருப்பதால் ராமர் பாலத்தை இந்தியாவின் தேசிய பாரம்பரிய சின்னமாக அறிவிக்க வேண்டும் என சுப்ரமணியன் சுவாமி உச்சநீதிமன்றத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு வழக்கு தொடர்ந்தது குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் ராமர் பாலம் எப்போது உருவானது, எப்படி உருவானது என்பது குறித்த தொல்லியல் ஆய்வு நடத்த இந்திய தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் கீழ் உள்ள தொல்பொருளியல் தொடர்பான மத்திய ஆலோசனைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. (ஜ-4)


கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியரான திரு ஆறுமுகம் இராஜபாலசிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

அமரர்

திருமதி. தங்கம்மா ஆறுமுகம்

அவர்கள் 25.01.2021 அன்று காலமாகிவிட்டார். அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 1940.07.05

இறப்பு 2021.01.25

யா/புத்த கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.


# அரசாங்கத்தால் துரோகத்திற்கு முகம்கொடுத்துள்ள மக்கள்

## சஜித் அழைப்பு

(கொழும்பு)

69 இலட்சம் மக்களுக்கு இந்த அரசாங்கம் துரோகியாகியுள்ளது. இவ்வாறு துரோகத்திற்கு முகம்கொடுத்துள்ள மக்களுக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் கதவு திறந்தேயிருக்கிறது. அவர்களை வந்து எம்முடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொம்பே பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மக்கள் தற்போது பாரிய நெருக் கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நினைத்தும் பார்க்க முடியாதளவிற்கு பொருட்களின் விலை வேகமாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது. நாட்டு மக்கள் வாழ்வதற்கான உரிமை நீங்கிக் கொண்டிருக்கி றது. விற்க மாட்டோம் எனக் கூறியவர்களே தற்போது வேகமாக விற்று கொண்டிருக்கிறார்கள்.

தேசிய சொத்துக்கள், தேசிய நிறுவனங்கள் உள்ளிட்டவற்றை இந்த அரசாங்கம் ஆட்சியமைத்த நாள் முதல் விற்பனை செய்ய ஆரம்பித்துவிட்டன. எதனையும் விற்க மாட்டோம் என்று கூறியவர்கள் வரலாற்றில் மிக வேகமாக எல்லையின்றி தேசிய சொத்துக்களை விற்று கொண்டிருக்கிறார்கள்.

நாம் எந்தவொரு வகையிலும் தேசிய சொத்துக்களை விற்க தயாராகயில்லை. எனினும் எமது நாட்டிலுள்ள வளங்களில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்க தயாராகவுள்ளோம். வெளிநாட்டு முதலீட்டின் ஊடாக கிடைக்கப் பெறும் டொலர் வருமானத்தை நாட்டு மக்களின் நன்மைக்காக பயன்படுத்துவோம். மக்களின் உரிமைகளுக்காக முன்னிற்கும் வீரன் ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமேயாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)



அராலி தெற்கு சைவத்தமிழ் இளைஞர் மன்றத்தினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கரைப்பிட்டிப் பிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள அராலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. குறித்த இரத்ததான முகாமில் 52 பேர் குருதி வழங்கினர். தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி ம.பிரதீபனுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை இரத்தவங்கிப் பிரிவினரும் கலந்து கொண்டனர்.

(படம்:-ரவிசரந்)

# வீதியில் மின்கம்பங்களை நாட்ட மின்சார சபை முன்வரவேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-தனங்கிளப்பு வீதியில் மின்கம்பங்கள் நாட்டப்பட்டு தெரு விளக்குகள் பொருத்த மின்சாரசபை உதவ வேண்டுமென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.தர்சன் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏ9 வீதியையும் ஏ32 வீதியையும் இணைக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான தனங்கிளப்பு வீதியைக் காபெட் வீதியாக மாற்றும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுமார் 4 கிலோமீற்றர் நீளமான குறித்த வீதியில் மின்கம்பங்கள் இல்லாமையால் அவ்விடத்தில் உள்ளூராட்சி சபைகள் தெரு விளக்குகளைப் பொருத்த முடியாத நிலை காணப்படுகிறது.

வீதி புனரமைப்பின் பின்னர் மின்சாரசபை நான்கு கிலோமீற்றர் தூரத்திற்கு மின்கம்பங்கள் நாட்டி உதவும் பட்சத்தில் சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசசபை ஆகியன தெரு விளக்குகளைப் பொருத்த முடியும். இதனூடாக இரவு வேளைகளில் தனங்கிளப்பு வீதியில் இடம்பெறும் களவு உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியும்.

எனவே சாவகச்சேரி நகரசபை இது தொடர்பான கோரிக்கை கடிதம் ஒன்றினை மின்சாரசபைக்கு அனுப்பி வைப்பதுடன், அதன் பிரதியை ஆளுநருக்கும் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (5-4-30)

# வீட்டுத் திட்ட கொடுப்பனவுகள் இதுவரை கிடைக்கவில்லை

(சாவகச்சேரி)

2019 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் தென்மராட்சிப் பகுதியில் வழங்கப்பட்ட 163 வீட்டுத்திட்ட வீடுகளுக்கான 84.2 மில்லியன் ரூபாய் நிதி இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கைதடி கிழக்கில் 25 வீடுகள், கைதடி நாவற்குழி 58 வீடுகள், கோவிற்குடியிருப்பில் 51 வீடுகள் மற்றும் எழுதுமட்டுவாழ் வடக்கில் 29 வீடுகள் என மொத்தமாக 163 வீட்டுத்திட்ட வீடுகளுக்கான 84.2 மில்லியன் ரூபாய் நிதியே இது வரை கிடைக்கப்பெறாமல் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக கூட்டத்திற்கு தலைமை வகித்த மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கருத்து தெரிவிக்கையில், சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய போது வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான கொடுப்பனவே இவ்வாறு வழங்கப்படாமல் உள்ளது.

குறித்த வீட்டுத்திட்டங்களை இந்தியன் வீட்டுத்திட்டங்களாக மாற்றி கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் இந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு சதம் கூட வழங்கப்படாத நிலையில் காணப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கு இந்தியன் வீட்டுத்திட்டம் ஊடாக ஐந்தரை இலட்சம் ரூபாய் பணம் வழங்கப்பட்டு வருகின்றது என மேலும் அவர் தெரிவித்தார். (நி-5-30)

# கவிதை, சிறுகதை பட்டறை

(யாழ்ப்பாணம்)

தமிழ் பாரம்பரியத்தை வளர்க்கும் நோக்கில் கவிதை, சிறுகதை பட்டறை நிகழ்வு நாளை மறுதினம் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அரியாலை திருமகள் சனசமூக நிலைய அரங்கில் வளவாளர் கவிஞர் மாவை. நா. கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

7-20 வயதுக்கிடைப்பட்ட ஆர்வமுள்ள மாணவர்கள் பங்கு பற்ற முடியும்.

27 ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளும் முதல் 30 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவதோடு நிகழ்விற்கு வருகை தரும் அனைத்து மாணவர்களும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வருகை தரவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி.5,4)

# பேருந்து நிலையம் நாளை திறப்பு

(கரணவாய்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சி யாழ். முனீஸ்வரன் வீதியில் அமைக்கப்பட்ட நெடுந் தூர பேருந்து நிலையம் நாளை 27 ஆம் திகதி புதன்கிழமை திறந்து வைக்கப்படும். (5-60)

# அந்தண மாணவர்களுக்கான சமஸ்கிருத வகுப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடை அருளாந்தப் பிள்ளையார் ஆலயத்தின் ஆனந்த குருகுலத்தில் அந்தண மாணவர்களுக்கான சமஸ்கிருத நாள் வகுப்பு நாளை மறுதினம் 28 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் ஆரம்பமாக வுள்ளது. எனவே சமஸ்கிருதம் கற்க விரும்பும் அந்தண மாணவர்கள் 077 691 4236 என்ற தொலைபேசி எண்ணுடன் அல்லது சிவஸ்ரீ ப. ஜெயகுமாரக் குருக்கள், பொறுப்பாசிரியர் ஆனந்த குருகுலம், கந்த ரோடை சுன்னாகம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு ஆனந்த குருகுலம் பொறுப்பாசிரியர் அறிவித்துள்ளார். (5)

# அங்கத்தவர் பட்டியல் காட்சிப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் (31.12.2020 இல் உள்ளவாறு) பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்கவும், வாக்களிக்கவும் தகைமை பெற்ற அங்கத்தவர் பட்டியல் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க கிளை நிலையங்களிலும் தலைமைக் காரியாலயத்திலும் 2021.01.25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 2021.02.11 ஆம் திகதி வியாழக்கிழமை வரை காட்சிப்படுத்தப்படவுள்ளது.

மேற்படி பட்டியலில் உறுப்பினர் ஒருவரின் பெயர் காணப்படாமை உறுப்பினர் பெயர், உறுப்பினர் இலக்கம் மற்றும் முகவரி தவறாகக் காணப்படுதல், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் ஒரு உறுப்பினர் பெயர் காணப்படுதல் ஆகியன தொடர்பில் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 2021.01.25 தொடக்கம் 2021.02.11 வரையான காலப்பகுதிக்குள் சங்க செயலாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (நி-5)

# நடமாடும் ஆயுர்வேத மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுதேச மருத்துவ துறையின் சமூக மருத்துவ பிரிவினால் நடமாடும் ஆயுர்வேத மருத்துவ சேவை நவாலி தெற்கு முதியோர் சங்கத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மேற்படி நடமாடும் மருத்துவச் சேவையை சித்த வைத்தியர் திருமதி. விஜிதரன் வனிதா ஆரம்பித்து வைத்தார்.

மேலும் இந்நடமாடும் மருத்துவ சேவையானது தொடர்ச்சியாக மாதம் இரு தடவைகள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மருத்துவர் திருமதி ஞானரதன் மயூரதி, வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், ஜே/136 கிராம உத்தியோகத்தர் நவாலி தெற்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-5-4)




# கடைகள் இடமாற்றம்

## எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்



(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தாக்கம் காரணமாக மூடப்பட்ட சங்கானைச் சந்தை நேற்று முன்தினம் மீண்டும் திறக்கப்பட்டது. அந்த வகையில் பழக்கடைகள் மற்றும் வெற்றிலைக் கடைகள் என்பன பழைய மீன் சந்தைக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வியாபாரிகள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

இது தொடர்பில் அவர்கள் கூறுகையில், சமூக இடைவெளி பேணவேண்டும் என்று கூறி எம்மை இடமாற்றியுள்ளனர். ஆனால் முன்பு எமது கடைகள் 120 அடிகள் நீளமான கட்டடத்திலேதான் அமைந்திருந்தது.

ஆனால் தற்போது வெறும் 60 அடிகள் கொண்ட கட்டடத்திலேயே தான் தற்போது கடைகளை அமைக்குமாறு கூறுகின்றார்கள்.


முன்பைவிட தற்போது தான் மிகவும் நெருக்கமாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் புதிதாக வழங்கப்பட்ட கட்டடம் இதுவரை தொற்று நீக்கம் செய்யப்படவில்லை.

புதிய கட்டடத்திற்கு சென்றால் எமது வியாபாரத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்படும். அதனால் எமது வாழ்வாதாரமும் பாதிக்கப்படும்.

எனவே உரியவர்கள் இதனை கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தனர். (நி-5-104)

# நெல் உலரவிடும் தளம் சேதம் விவசாயிகள் குற்றச்சாட்டு



(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட ஐயன்கன்குளம் பகுதியில் விவசாயிகளின் தேவை கருதி அமைக்கப்பட்ட நெல் உலரவிடும் தளம் சேதமாக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு ஐயன்கன்குளம் பகுதியில் விவசாயிகளின் தேவை கருதி அமைக்கப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ள நெல் உலரவிடும் தளத்தினை விவசாயிகள் பயன்படுத்த முடியாதவாறு சேதமாக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அதாவது வீதி புனரமைப்பு பணியில் ஈடுபட்டு வரும் தனியார் நிறுவனம் ஒன்று வீதி புனரமைப்புக்கு தேவையான கிரவல் மண் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு குறித்த பகுதியை பயன்படுத்தி வருகின்றமையால் அருகிலுள்ள நெல் உலரவிடும் தளம் விவசாயிகள் பயன்படுத்த முடியாத அளவிற்கு சேதமாக்கி காணப்படுவதாகவும் தற்போது காலபோக நெல் அறுவடை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அறுவடை செய்யும் நெல்லை உலரவிடுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.(ஜ-4-315)

# தடுப்பூசி வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவு

(கொழும்பு)

கொரோனாத் தடுப்பூசிகள் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் அவற்றை களஞ்சியப்படுத்துவதற்கும் உரியவர்களுக்கு வழங்குவதற்குமான சகல ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கான ஒத்திகைகளும் நிறைவடைந்துள்ளதாக இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தடுப்பூசிகளை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. அத்தோடு ஒத்திகைகளும் நிறைவடைந்துள்ளன.

எனவே தடுப்பூசி நாட்டை வந்தடைந்ததன் மறுநாளிலிருந்து அதனை வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பமாகிவிடும். தடுப்பூசியை முதற்கட்டமாக யாருக்கு வழங்குவது, அடுத்தகட்டமாக யாருக்கு வழங்குவது என்பவற்றுக்கான ஒழுங்குபடுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.


பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு தடுப்பூசிகள் வந்தடைந்ததன் பின்னர் அதனை களஞ்சியப்படுத்துவதற்கு எடுத்து செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கான ஒத்திகைகளும் இராணுவத்தின் பங்கேற்புடன் நடைபெற்றன.

பிரதானமாக கொழும்பில் அவற்றை களஞ்சியப்படுத்துவதற்கும் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் போது அங்கு களஞ்சியப்படுத்துவதற்



கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

தடுப்பூசிகளை களஞ்சியப்படுத்துவதற்கு ஏதுவான இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறான இடங்களுக்கு தேவையானோர் வரவழைக்கப்பட்டு அவ்விடங்களிலேயே தடுப்பூசி ஏற்றப்படும். மாறாக ஒவ்வொரு இடங்களுக்கும் எடுத்துச் சென்று தடுப்பூசி வழங்கப்பட மாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)




# ஷானி அபேசேகர ஸ்கைப்பில் வாக்குமூலம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர ஸ்கைப் தொழில்நுட்பத்தின் ஊடாக வாக்குமூலம் வழங்கியுள்ளார். (ஜ-4)


JOB வேலை வாய்ப்பு

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை (வ-து) பதவி வெற்றிடம்

பதவி : கணனிப் பக்க வடிவமைப்பாளர்
சம்பளக் குறியீட்டு இலக்கம் 323/16
சம்பளத்திட்டம் : 15135-120X10-135X10-17685
(கூ.வே.ஆணைக்குழுவின் 4/2018 சுற்றறிக்கையின் படி)

**கல்வித் தகைமைகள்**

சிங்களம்/தமிழ்மொழி மற்றும் கணிதம்/ எண் கணிதத்தில் திறமைச் சித்தியுடன் 02 தடவைகளுக்கு மேற்படாதவாறு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**அத்துடன்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பக்க வடிவமைப்பு தொடர்பான கற்கை நெறியொன்றினைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருப்பதுடன் கணனிப்பக்க வடிமைப்பாளர் பதவியில் யாதாயினும் நிறுவனமொன்றில் இரண்டு வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

- வயதெல்லை:- 18-45 வரை
- கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
- தெரிவு செய்யப்படுபவர்கள் சபையால் விதிக்கப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
- விண்ணப்பத்துடன் சகல சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்பட வேண்டும்.
- நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் நிறுவனத்தின் ஊடாக நிறுவன தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- விண்ணப்ப முடிவுத்திகதி :- 07.02.2021
- விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:- செயலாளர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை
கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதி,
2ம்மாடி, இல.12, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோர்கள் விண்ணப்பப் படிவத்தை சபையின் கடமை நேரத்தில் ரூபா 20.00 செலுத்தி பெற்று விண்ணப்பிக்கவும்.

**செயலாளர்,**
**யா.மா.கூ.சபை.**

(சி-1251)


# ஒரு வருடத்திற்கு எந்த தேர்தலும் நடைபெறாது

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கொரோனாத் தொற்று நெருக்கடி காரணமாக ஒரு வருடத்திற்கு எந்தத் தேர்தலும் நடைபெறாது என இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறை பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், கொரோனாத் தொற்றின் இரண்டாவது அலையை கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டுக்களை நிராகரித்தார்.

முதலாவது அலையை முடக்க கட்டுப்பாடுகள் மூலம் கட்டுப்படுத்த அரசாங்கத்தால் முடிந்தது என குறிப்பிட்ட அவர், பொருளாதாரத்தையும் நாட்டையும் தொடர்ச்சியாக நிறுத்திவைக்க முடியாது என ஜனாதிபதி கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால், சுற்றுலாத்துறையினால் கிடைக்கும் சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை நாடு இழந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தாக்குதல்களுக்குப் பின்னர் நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாகக் குறைந்துவிட்டதாகவும் அன்றிலிருந்து அத்துறை மீளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு கடன் சுமையில் இருந்த போது இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது என்றும் இருப்பினும் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் வட்டி விகிதத்தைக் குறைக்கவும் தங்களால் முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு பணியாளர்களுக்கு தொற்று

(கொழும்பு)

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பணிபுரியும் 11 பாதுகாப்புப் பணியாளர்கள் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து லிமிடெட் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

இவ்வாறு கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்கள் ஜா-எல பகுதியில் வசிப்பவர்கள் ஆவர்.

இந்நிலையில் சுகாதார அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் தங்களது வீடுகளை தனிமைப்படுத்திக் கொள்ளுமாறும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# நெல் உலரவிடும் தளங்கள் இன்மையால் பச்சையாகவே விற்பனை செய்யப்படுகிறது

(அக்கராயன்)

**அறுவடைக் காலத்தில் மழை பெய்தமையால், மாவட்டத்தில் நெல் உலர விடும் தளங்கள் இல்லாமை காரணமாக விவசாயிகள் நெல்லினை உலர விடாமலே பச்சையாக விற்பனை செய்து வருகின்றனர்.**



கிளிநொச்சி மாவட்டத்தில் தனியார் வியாபாரிகளினால் மட்டும் தற்போது நெல் கொள்வனவு இடம் பெற்று வருகின்றது. அதிகமான நெல் தனியார் வியாபாரிகளினால் கொள்வனவு செய்யப்படு கிறது.

கிளிநொச்சியில் நெல் சந்தைப்படுத்தும் சபை அறுவடை காலங்களில் உரிய நேரத்தில் விவசாயிகளிடம் இருந்து நெல்லினைக் கொள்வனவு செய்வதில்லை என்ற குற்றச்சாட்டும் விவசாயிகளிடம் உள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் மழை வெள்ளம் காரணமாக வீதிகள் பல சேதமடைந்திருப்பதன் காரணமாக பாரவூர்திகள் வயல் நிலங்களுக்கு செல்ல முடியாதுள்ளது.

எனவே உழவு இயந்திரங்களில் கொஞ்சம் கொஞ்சமாக நெல்லினை ஏற்றி பாரவூர்தியில் மாற்றுகின்ற நிலை காணப்படுகிறது.

இவ்வாண்டு காலபோகம் மிகவும் கஷ்டமாக அமைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (5-30)

# ஆறுமுகத்தான் குள மக்களுக்கு போக்குவரத்துச் சேவை தேவை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் தண்ணிமுறிப்பு, ஆறுமுகத்தான்குளம் கிராமத்திற்கு பேருந்து சேவை இடம்பெறுவதில்லை என பொது மக்களினால் தெரி விக்கப்படுகிறது.

115 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் அயற் கிராமமான குமுழமுனை கிராமத்திற்கு அடிக்கடி பேருந்து சேவை இடம்பெறுகின்றபோதும் ஆறுமுகத்தான் குளத்திற்கு இடம்பெறுவதில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

ஆறுமுகத்தான் கிராமத்திலிருந்து குமுழமுனை மகா வித்தியாலயத்திற்குச் செல்கின்ற மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளதாகவும் கிராம மக்கள் முல்லைத்தீவு நகரத்தில் உள்ள வைத்திய சாலை, மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் நகரத்தில் பிற தேவைகளுக்கு போக்குவரத்து செய்வதில் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

குமுழமுனை கிராமம் வரை இடம்பெறுகின்ற பேருந்து சேவையை ஆறுமுகத்தான்குளம் வரை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-350)




# வவுனியாவில் முடக்கப்பட்ட பகுதிகளில் வியாபார நடவடிக்கைக்கு அனுமதி

(நெளுக்குளம்)

வவுனியாவில் முடக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்கள் நிபந்தனைகளுடன் மீண்டும் திறந்து வழமை போன்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென சுகாதார பிரிவினர் தெரிவித்தனர். இதனையடுத்து நேற்று வியாபார நிலையங்கள் திறக்கப்பட்டன.

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்த நிலையில் வவுனியாவில் பல இடங்கள் முடக்கப்பட்டு வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் உரிமையாளர்கள், ஊழியர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா நகரின் பஜார் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி, மில் வீதி, சூசைப்பிள்ளையார் குள வீதி, கந்தசுவாமி கோவில் வீதி, ஹொரவப்பொத்தானை வீதியின் ஒரு பகுதி என்பன சுகாதார பிரிவினரினால் முடக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தன.

மேலும் பி.சி.ஆர்.அல்லது அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ள தவறியவர்கள் வர்த்தக சங்க காரியாலயத்தில் படிவத்தினைப்பெற்று பூர்த்திசெய்து வழங்குவதன் மூலம் இன்று செவ்வாய்க்கிழமை நகரசபை மண்டபத்தில் நடைபெறும் பரிசோதனையை மேற்கொண்டு அட்டையைப் பெற்ற பின்னர் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் எனவும் மீறி செயற்படும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.(5-4-299)

# கலாநிதி சிவகுமாரின் ஆய்வு நூல் வெளியீடு



(அக்கராயன்)

கிளிநொச்சி மக்கள் சிந்தனைக் களத்தின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவகுமாரின் வடக்கின் நீர் ஆதாரமும், பங்கீட்டுக் கொள்கையும், அதன் பயன்பாட்டு உத்திகளும் ஆய்வு நூல் வெளியீடு நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத் தில் இடம்பெற்றது.

மக்கள் சிந்தனைக்களத்தின் தலைவர் வண. அருட்தந்தை ரி.யோசுவா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார். நூலின் முதற்பிரதியை யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி வெளியிட்டு வைக்க விவசாய விஞ்ஞானி கலாநிதி எஸ்.ஜே. அரசகேசரி பெற்றுக் கொண்டார். (5-4-350)

# இராஜகோபுர கும்பாபிஷேகம்



(தருமபுரம்)

கிளிநொச்சி புளியம் பொக்கணை திருவருள்மிகு நாகதம்பிரான் ஆலய இரட்டை இராஜகோபுர மகா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை மறுதினம் 28 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலயத்திற்கு வருகை தரும் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருகை தருமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5-316)



**கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களில் 30 கிராமங்களுக்கு பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் ஒருங்கிணைப்புக்குழு இணைப்பாளர் வை.தவநாதன் மற்றும் மேலதிக இணைப்பாளர் கோ.றுசாங்கன் ஆகியோர் வழங்கி வைத்தனர். (படம்:-கிருஷ்ணகுமார்)**

# கன்னாட்டி அ.த.க பாடசாலை மீண்டும் திறக்க நடவடிக்கை

(நெளுக்குளம்)

நீண்ட நாட்களாக மூடப்பட்டுள்ள கணேசபுரம் கன்னாட்டி அ.த.க.பாடசாலை விரைவில் திறக்க வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் நடவடிக்கை எடுத்துள்ளார். இது தொடர்பாக கல்வி திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். அக்கிராம மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயச் சென்ற போதே மக்கள் குறித்த விடயம் தொடர்பில் தெரிவித்ததை அடுத்தே நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4-299)



# இராசிபலன்

**26.01.2021**
**தை 13, செவ்வாய்க்கிழமை**
**திரயோாதசி பின்னிரவு 1.17 மணிவரை**
**திருவாதிரை பின்னிரவு 3.27 மணிவரை**
**சுபநேரம் 11.06-12.36 மணிவரை**
**இராகுகாலம் 3.36-5.06 மணிவரை**
**சந்திராஷ்டமம்- கேட்டை**
**பிரதோச விரதம்**

வளவன்


மேஷம்

நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், சகோதர வழி ஒற்றுமை மேலோங்கும் நாள், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


ரிஷபம்

நிதி நிலை உயரும் நாள், உறவினர் மத்தியில் மதிப்பும் மரரியாதையும் உயரும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


மிதுனம்

இறை வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள்.


கடகம்

சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், சயன சுகக் குறைவான நாள்.


சிம்மம்

செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வெளியூர்த் தொடர்புன் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.


கன்னி

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.


துலாம்

தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ரோக பயமுண்டு.


விருச்சிகம்

எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வரவைக் காட்டிலும் செலவுகள் கூடலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


தனுசு

குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு.


மகரம்

உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், உடல் நலம் சீராகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


கும்பம்

சுப செய்திகள் வந்து சேரலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், உறவினர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.


மீனம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் கூடும்.

காலத்தின் அருமை அறிந்தவர் அதை வீணாக்க மாட்டார்.

# ஜனாஸாக்களை எரிக்கும் பொறுப்பை ஜனாதிபதியே ஏற்க வேண்டும்

(கொழும்பு)

கொரோனாவால் மரணிப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதால் பிரச்சினை இல்லை என நிபுணர்கள் குழு தெரிவித்திருந்தும் அரசாங்கம் தொடர்ந்து சடலங்களை எரித்து வருகின்றது.

முஸ்லிம்கள் ஜனாஸாக்களை எரிக்கும் பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய முடியும் என தெரிவித்து, சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையை அரசாங்கம் செயற்படுத்தாமல் இருப்பது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



மேலும், கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வது தொடர்பாக அரசாங்கத்துக்கு தீர்மானம் எடுக்க முடியாது. அது சுகாதாரம் தொடர்பான பிரச்சினை என்பதால் சுகாதாரப் பிரிவினரின் தீர்மானத்துக்கமைய செயற்பட தயார் என அரசாங்கம் தெரிவித்து வந்தது. அதன் பிரகாரம் கொரோனாவால் மரணிப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்யலாமா? என ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சினால் விசேட நிபுணர்கள் குழுவொன்றை நியமித்திருந்தது. குறித்த குழு தனது அறிக்கையை கடந்த மாதம் இறுதியில் சுகாதார அமைச்சுக்கு கையளித்திருந்தது.

அத்துடன் அரசாங்கத்தின் தொழில்நுட்பக் குழுவின் வைரஸ் தொடர்பான நிபுணர்கள் இல்லை. அதில் சட்ட வைத்தியர்களும் அரசாங்க வைத்திய அதிகாரிகளின் ஆலோசனையாளர்களுமே இருக்கின்றனர். ஆனால் சுகாதார அமைச்சினால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் 11 பேரில் 6 பேர் வைரஸ் தொடர்பான விசேட நிபுணர்களாகும். ஏனையவர்கள் வேறு துறைசார்ந்த நிபுணர்கள். இவர்களின் அறிக்கையை அரசாங்கம் தற்போது மறைப்பது அரசியல் நோக்கத்துக்காகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பாணந்துறை வடக்கு பொலிஸ் பகுதியில் உள்ள பள்ளிமுல்லைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆட்டோவில் சென்று கொண்டிருந்த ஒருவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மேற்கொண்ட துப்பாக்கிபிரயோகத்தில் குறித்த நபர் படுகாயமடைந்தார்.

இதனை அடுத்து பாணந்துறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஜ-4)

# கைக்குண்டு மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள வலையிறவு பாலத்தின் கீழ் கைவிடப்பட்ட நிலையில் நேற்று கைக்குண்டு ஒன்றை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய இக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமை பெற்றார் சம்பிக்க

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஐக்கிய மக்கள் சக்தியில் நேற்று திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக இணைந்துள்ளார்.

அவருக்கு உறுப்புரிமையை வழங்க ஏற்கனவே செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக கட்சியின் ஊடகப் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் அடுத்த வாரம் இடம்பெறவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூட் டத்தில் கலந்து கொள்வார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியில் பொதுச் செயலாளர் பதவியில் இருந்தும் கட்சியின் உறுப்பினர் பதவியில் இரு



ந்தும் 2020 டிசெம்பரில் சம்பிக்க ரணவக்க விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தொடர்ந்து அதிகரிக்கும் தொற்றாளர்கள் எண்ணிக்கை

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற போதும் கொரோனா பரவல் கட்டுக்குள் இருப்பதாக இலங்கையின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார சேவைகள் உதவிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக கொரோனாத் தொற்றாள்ர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் கொரொனாத் தொற்றுக்கள் கண்டறியப்பட்டுள்ளன.


இது ஏற்கனவே பரவியுள்ள கொத்தணிகளில் மாத்திரம் வரையறுக்கப்படாத வகையில் பரவி வருகின்றது.

பண்டிகைக்காலத்தில் பொது மக்கள் நாடளாவிய ரீதியில் போக்குவரத்துக்களை மேற்கொண்டதன் காரணமாகவே பரவலில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# தொலைத்தொடர்பு வலையமைப்பை சீரமைப்பதற்கு கோரிக்கை

(அக்கராயன்)

**கொரோனாத் தொற்று காரணமாக தற்போதைய சூழ்நிலையில் இணையவழிக் கற்றல் முக்கிய இடத்தை பெற்றுள்ளது. இந்நிலையில் தொலைபேசி வலையமைப்பு சீரின்மை பாரிய பிரச்சினையாக உள்ளது. இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.**



முல்லைத்தீவு உடையார்கட்டு பிரதேசத்தில் தொலைத்தொடர்பு வலையமைப்பு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்று தருமாறு பிரதேச மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஆ.ஜோன்சனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உடையார்கட்டு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களான மூங்கிலாறு தேராவில், குரவில், இருட்டுமடு, சுதந்திரபுரம், வெள்ளப்பள்ளம் போன்ற பிரதேசங்களில் டயலொக் மற்றும் மொபிற்றல் ஆகிய தொலைபேசிகளின் வலையமைப்பு தெளிவாக இல்லாமை பெரும் பிரச்சினையாக உள்ளது.


குறிப்பாக தொலைபேசிகளை சீராகப் பயன்படுத்தி தொடர்புகளை பேண முடியாமல் உள்ளது. இணையத்தள சேவையினையும் சிறந்த முறையில் பெற முடியவில்லை. சுமார் பத்து வருடங்களாக இந்த பிரச்சனை தொடர்கின்றது.

அது மட்டுமல்லாது பல்கலை. மாணவர்கள், பாடசாலை மாணவர்களும் இதன்மூலம் பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

குறிப்பாக இணைய வழி கற்றல் நடவடிக்கையின் போது அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தொடரில் உறுப்பினர் ஜோன்சன் கலந்துரையாடலுக்குரிய பிரேரணையாக குறித்த விடயம் எடுக்கப் பட்டு உடனடியாக தொலை பேசி வலையமைப்பை சீர் செய்து வழங்குமாறு சபை மூலம் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது. (நி-5-4-350)

# குளங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் நெற் செய்கையை அதிகரிக்க முடியும்



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கைவிடப்பட்ட அபிவிருத்தித் திட்டமாக வன்னேரிக்குளம் தேவன்குளம் இணைப்பு காணப்படுகின்றது. 1996 ஆம் ஆண்டு கரைச்சியின் வன்னேரிக் குளத்தையும் பூநகரியின் தேவன் குளத்தையும் இணைத்து பெரும் நீர்த் தேக்கம் ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசிற்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

இவ் வேலைகள் தொடங்குவதற்கான வாய்ப்புகள் இருந்த போதிலும் நாட்டில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக குறித்த திட்டம் நிறைவேற்றப்படவில்லை. 2010 அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வன்னேரிக் குளம், ஜெயபுரம் கிராமங்களுக்கு வருகை தந்த போது கைவிடப்பட்ட மேற்படித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 1,000 ஏக்கருக்கு மேலான வயல் நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகக் கூட்டங்களிலும் இவ்விடயங்கள் ஆராயப்பட்டிருக்கின்றன.

ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் கைவிடப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றாக வன்னேரிக் குளம் தேவன்குளம் இணைப்பு காணப்படுகின்றது.

இதனை கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இப் பிரச்சினை ஆராயப்பட்டு குறித்த திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வன்னேரிக்குளம், ஜெயபுரம் கிராம மக்கள் பெரும் நன்மையடைவார்கள். வன்னேரிக்குளத்தில் மட்டும் 363 ஏக்கரில் தற்போது நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. (நி-5-350)

# நிர்வாகத் தெரிவு

(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் இளைஞர் சேவை அதிகாரி ரா.சசிகரன் தலைமையில் வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக சண் இளைஞர் கழகத்தின் தலைவர் கிரிஷ்டீன்ராஜ், உப தலைவராக யுரேனஸ் இளைஞர் கழகத்தின் தலைவர் க.சிம்சுபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இச் சம்மேளனத்தின் பொதுக் கூட்டத்திற்கான பிரதம விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் கமலதாசன், மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் அஜித்சந்திர சேன, வவுனியா பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் விந்துஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(5-299)

# ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தை தேசிய பாடசாலையாக மாற்ற கோரி பெற்றோர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தை தேசிய பாடசாலையாக மாற்றக் கோரி பெற்றோர் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.


முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய பாடசாலையானது அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளின் பெயர்ப்பட்டியலுக்குள் உள்வாங்கப்படவில்லை என தெரிவித்து குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் பெற்றோர்களால் முன்டுெக்கப்பட்டது.

தமது பாடசாலை தேசிய பாடசாலைக்கு உள்வாங்குவதற்கான சகல தகுதிகள் இருந்தபோதும் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளுக்கு தரம் உயர்த்தப்பட்ட பாடசாலைகளின் பட்டியலில் தமது பாடசாலை உள்வாங்கப்படவில்லை என தெரிவிக்கும் பெற்றோர் இது எவ்வாறு இடம் பெற்றது என்பது தொடர்பான தெளிவுபடுத்தலை தமக்கு வழங்க வேண்டும் எனக் கோரியே இக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

அண்மையில் மாவட்ட அரசாங்க அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடிய போது எமது பாடசாலை தெரிவு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்த போதும் தற்போது எமது பாடசாலை அந்தப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது எவ்வாறு அல்லது ஏன் தெரிவு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 8 மணிக்கு பாடசாலை முன்பாகக் கூடிய பெற்றோர்கள் பாடசாலை அதிபரை சந்தித்ததோடு பாடசாலை அதிபரை பெற்றோர்கள் போராட்டம் நடத்துகின்ற வீதிக்கு வருகை தந்து இதற்கான காரணங்களைக் கூறுமாறு அழைத்து இருந்தனர். பாடசாலை அதிபர் தன்னால் உரிய தரவுகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான மேலதிக தகவல்கள் தெரியாது என்று தெரிவித்தார். அதன்போது பெற்றோர்கள் குறித்த இடத்திற்கு வலய கல்வி பணிப்பாளர் வருகை தந்து இதற்கான பதிலை வழங்க வேண்டும் எனக் கோரி பாடசாலை முன்பாக அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-5-281)

# தாய் யானை இறந்தது தெரியாமல் தட்டி தட்டி எழுப்பிய குட்டி யானை



(கேரளா)

கேரளாவில் தாய் யானை இறந்தது தெரியாமல் குட்டி யானை பரிதவித்தது. உடலை தும்பிக்கையால் தட்டி, தட்டி எழுப்பிய குட்டி யானையின் பாசப்போராட்டம் பார்ப்பவர்களை நெகிழ்ச்சி அடைய செய்தது.

கேரளாவில் திருவனந்தபுரம் அருகே பிரசித்திபெற்ற சுற்றுலாத் தலமான விதுரா வனப்பகுதி உள்ளது. இங்குள்ள கல்லாறு ஆற்றுப்பகுதியில் சுமார் 25 வயதுடைய தாய் யானை ஒன்று இறந்து கிடந்தது.

அதன் அருகில் குட்டி யானை ஒன்று தாயை பிரிய முடியால் பாசப்போராட்டம் நடத்தியது. தாய் யானை இறந்தது தெரியாமல், அதன் உடலை தன்னுடைய தும்பிக்கையால் தட்டி, தட்டி எழுப்பியது.

குட்டி யானையின் பாசப்போராட்டத்தை சிலர் நேரில் பார்த்து, உடனடியாக வனத்துறையினருக்கு தகவல் கொடுத்தனர். பின்னர் வனத்துறை ஊழியர்கள் அங்கு விரைந்து சென்று இறந்த தாய் யானையின் உடலை அப்புறப்படுத்த முயன்றனர். ஆனால், குட்டி யானை வன ஊழியர்களை அருகில் செல்ல அனுமதிக்கவில்லை.

தொடர்ந்து வனத்துறை ஊழியர்கள் சுமார் 2 மணி நேரம் போராடி குட்டியானையை மீட்டனர். அதற்கு சுமார் ஒரு வயது இருக்கும். வனச்சட்டப்படி ஒரு வயது நிறைவுடையாத குட்டி யானையை காட்டுக்குள் விட முடியாது. எனவே, இதுகுறித்து அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். (நி-4)

# 2 ஆயிரம் அடி ஆழத்தில் சிக்கிய தொழிலாளர்கள் 14 நாட்களின் பின் உயிருடன் மீட்பு

(பீஜிங்)

சீனாவில் தங்க சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தால் பூமிக்கு அடியில் சிக்கிய 11 தொழிலாளர்கள் 14 நாட்களுக்கு பிறகு பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.



கனிம வளங்கள் நிறைந்த சீனாவில் ஏராளமான நிலக்கரி மற்றும் தங்க சுரங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

இவற்றில் சில சுரங்கங்கள் மட்டுமே உரிய அனுமதி பெற்றும் முறையான பாதுகாப்பு அம்சங்களுடனும் செயற்படுகின்றன. பல சுரங்கங்கள் அனுமதி இல்லாமலும் பாதுகாப்பு அம்சங்கள் ஏதுமில்லாத ஆபத்தான சூழலிலும் இயங்குகின்றன.

இதனால் சீனாவில் அடிக்கடி சுரங்க விபத்துகள் ஏற்படுகின்றன. இதில் ஆண்டுதோறும் 100 இற்கும் மேற்பட்ட சுரங்கத் தொழிலாளர்கள் பலியாகி வருகின்றனர்.

ஆனாலும் சீன அரசு இதில் கவனம் செலுத்தாததால் சுரங்க விபத்துகள் தொடர்ந்து வருகின்றன.

இந்த நிலையில் சீனாவின் கிழக்கு மாகாணம் ஷாண்டோங்கின் யாண்டாய் நகரில் உள்ள தங்க சுரங்கத்தில் கடந்த 10 ஆம் திகதி தொழிலாளர்கள் வழக்கம்போல் தங்கத்தை வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் சுரங்கத்தில் பயங்கர வெடிப்பு நேரிட்டது. இதில் சுரங்கத்தின் நுழைவு வாயில் பகுதி முற்றிலுமாக இடிந்து விழுந்தது.

இதனால் சுரங்கத்துக்குள் இருந்த தொழிலாளர்கள் 11 பேர் பூமிக்கு அடியில் சிக்கிக் கொண்டனர். இந்த விபத்து பற்றிய தகவல் கிடைத்ததும் 100 இற்கும் மேற்பட்ட மீட்புக் குழுவினர் வரவழைக்கப்பட்டு மீட்பு பணிகள் முடுக்கி விடப்பட்டன. ஆனாலும் ஒரு வாரம் ஆகியும் மீட்பு பணியில் எந்த முன்னேற்றமும் ஏற்படாமல் இருந்தது.

எனவே சுரங்கத் தொழிலாளர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கக் கூடும் என்று கருதப்பட்டது.

இந்த சூழலில் தான் கடந்த 17 ஆம் திகதி சுரங்கத்தில் இருந்த சிறிய துளை வழியாக மீட்பு குழுவினர் கயிறு ஒன்றை பூமிக்கு அடியில் அனுப்பினர்.

பின்னர் சிறிது நேரத்துக்குப் பிறகு அந்த கயிற்றை மேலே எடுத்தபோது அதில் சிறிய காகிதத் துண்டு ஒட்டப்பட்டிருந்தது. அதில் 2000 அடி ஆழத்தில் 11 தொழிலாளர்களும் அதற்கும் கீழ் 100 அடி ஆழத்தில் ஒரு தொழிலாளரும் சிக்கியிருப்பதாக எழுதப்பட்டிருந்தது. மேலும் வெடிப்பின்போது தங்களில் சிலருக்கு காயங்கள் ஏற்பட்டதாகவும் அதற்கு சிகிச்சை அளிக்க மருந்துகள் தேவை என்றும் உணவு தேவைப்படுவதாகவும் தொழிலாளர்கள் மீட்புக் குழுவினருக்கு அனுப்பிய அந்த குறிப்பில் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து தொழிலாளர்கள் கேட்டபடி மருந்துகள், உணவுகள் உள்ளிட்டவை அந்தத் துளை வழியாக அனுப்பிவைக்கப்பட்டன. மேலும் தொழிலாளர்கள் அனைவரையும் பத்திரமாக மீட்பதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டன.

இதன் பலனாக பூமிக்கு அடியில் சிக்கிய தொழிலாளர்கள் 11 பேரும் விபத்து நடந்த 14 நாட்களுக்குப் பிறகு நேற்றுக் காலை பத்திரமாக மீட்கப்பட்டனர். (நி-4)

# கொரோனா வைரஸ் கிருமி தொடர்ந்து உருமாறிக் கொண்டே இருக்கும்

## ஆச்சரியப்பட எதுவுமில்லை என்கிறது அமெ.மருத்துவத்துறை

**(வோஷிங்டன்) கொரோனா வைரஸ் தொடர்ந்து உருமாறி கொண்டே இருக்கும் என்று அமெரிக்க மருத்துவத்துறை தலைவர் விவேக் மூர்த்தி தெரிவித்துள்ளார்.**

கொரோனாத் தொற்று கிருமி தொடர்ந்து உருமாறிக்கொண்டே இருக்கும். அதை எதிர்கொள்ள மக்கள் தயாராக இருக்க வேண்டும்.

பாதிப்பு ஏற்படும்போது தான் அதன் வகைகளை அடையாளம் காண முடியும்.

எனவே மரபணு ரீதியிலான சிறந்த கணகாணிப்பை உறுதிப்படுத்த வேண்டும். மக்கள் தொடர்ந்து கொரோனா பரவல் தடுப்பு விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

கொரோனா கிருமி உருமாறுவதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. அதுதான் வைரஸின் இயல்பு. பிரிட்டனிலும் தென் ஆபிரிக்காவிலும் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனா பிரேசிலில் கண்டறியப்பட்ட 'பி.1' கொரோனா ஆகியவை வேகமாக பரவும் தன்மை உடையவை.

இவற்றில் பிரிட்டனில் கண்டறியப்பட்டுள்ள உருமாறிய கொரோனா அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்பது அண்மையில் வெளியான புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. இதுபற்றிய கூடுதல் தகவல்கள் தேவைப்படுகிறது.

இந்த பாதிப்பை திறம்பட எதிர்கொள்ள சிகிச்சை முறைகள் மேம்படுத்தப்பட வேண்டும். தொற்று பரவல் தொடர்பான விபரங்களை கண்டறிய தொடர் பரிசோதனை செய்ய அதிக முதலீடு தேவை.

பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தாலும் மக்கள் முகக்கவசம் அணிவதை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். ஓரிடத்தில் அதிக எண்ணிக்கையில் கூடுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுகிறது-ரஷ்யா குற்றச்சாட்டு



(மொஸ்கோ)

எதிர்க் கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னியை ஆதரிக்கும் எதிர்ப்பாளர்கள் மீதான ஒடுக்குமுறையைத் தொடர்ந்து அமெரிக்கா தனது உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக ரஷ்யா குற்றம்சாட்டியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனுடன் பேசுவத்கு ரஷ்ய ஜனாதிபதி தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் பல மாதங்களாக சிகிச்சையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த வார இறுதியில் ரஷ்யாவுக்குத் திரும்பியபோது கைது செய்யப்பட்ட நவல்னிக்கு ஆதரவாக பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர்.

நாடு முழுவதும் மூவாயிரத்து 500 இற்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டதுடன் மொஸ்கோவில் பொலிஸாருடன் ஏற்பட்ட மோதல்களில் பலர் காயமடைந்தனர்.

இந்நிலையில், ரஷ்யா முழுவதும் உள்ள நகரங்களில் இவ்வார இறுதியில் எதிர்ப்பாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதை அமெரிக்கா கண்டித்துள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கவும் அழைப்பு விடுத்தது.

இந்த சூழலில், உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதாக ரஷ்யா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 3 இடங்களில் திருமண நிகழ்வு தம்பதியால் ஏற்பட்ட பாதிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் 3 நாட்களில் 3 இடங்களில் திருமண நிகழ்வு நடத்திய புதுமண தம்பதிக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இந்த திருமண நிகழ்வுகள் பாதுக்க, வட்டரெக்க பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளன. இதன் காரணமாக 3 நிகழ்விலும் கலந்து கொண்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது. கடுவெல, பாதுக்க மற்றும் வட்டரெக்க ஆகிய பிரதேசங்களில் இந்த திருமண நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் திருமண நிகழ்வுகளுக்கு அனுமதி பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# சில இடங்கள் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)

நாட்டில் மேலும் சில பகுதிகளில் நேற்றுக் காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளதுடன் மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலாந்தோட்ட பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 140 பொலான தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் மல்கோனிய பகுதி நேற்றுக் காலை 6 மணிமுதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ-4)

# ஹெரோயின் மீட்பு

(பாணந்துறை)

பாணந்துறை, பின்னவத்தை பகுதிகளில் சுமார் 40 கிராம் ஹெரோயின் பக்கெட்டுகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 35 வயதுடையவர் ஆவார்.

நேற்று முன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கைதான சந்தேக நபரை பாணந்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

## வசந்தவுக்கு தொற்று

(கொழும்பு)

கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார கொரோனாத் தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது. (ஐ-4)

# மேல் மாகாணம் விசேட பாதுகாப்பு வலயத்துக்குள்

(கொழும்பு)

மேல்மாகாணத்தில் எதிர்வரும் தினங்களில் தனிமைப்படுத்தல் விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா? என்பது தொடர்பில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதுடன் உடனடி அன்டிஜன் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை பாடசாலை மாணவர்களை அழைத்துச் செல்லும் வாகனங்கள் தொடர்பிலும் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன், பாடசாலை வாகன சாரதிகளுக்கு அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேல்மாகாணத்தின் பல பகுதிகளில் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்போது தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு சட்டவிதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா? என்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மேல்மாகாணத்தில் மக்கள் நடமாட்டம் அதிகமான பகுதிகளில் உடனடி அன்டிஜன் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நேற்று திங்கட்கிழமை தொடக்கம் மேல் மாகாணத்தில் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பாடசாலை மாணவர்களை அழைத்துச் செல்லும் வாகனங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.(ஐ-4)

# நோய் எதிர்ப்பு பானத்தை வழங்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள தடுப்பூசி செலுத்தும் பணிகளுக்கு இணையாக, நோய் எதிர்ப்பு பானத்தை வழங்குவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோரப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை அரச ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது. கொவிட்-19 நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தனியார் வைத்தியசாலைகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2215

### மகிஷினி



பிறப்பால் ஏழைதான்
குணத்தால் கோடீஸ்வரி

### துர்க்கா


நமக்கு இருக்கிற பிரச்சினைய எல்லாம் மறக்கனும்னா அது நம்ம Friends ஆல மட்டும் தான் முடியும்..



ஏன்னா அவன் புதுசா ஒரு பிரச்சினைய கொண்டு வருவான் பழசு தானா மறந்துடும்...

### சந்துரு

கறி இருக்கும் வரை தான் அது பேரு பிரியாணி... முடிந்து விட்டால் அது வெறும் குஸ்கா தான்..



அது போல தான் இந்த மனித உயிரும், உடலும்..!!

### தர்ஷா

“வீடு கட்ட லோன் வாங்கின பணத்தில இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்டியாமே நிஜமா?”
“இப்போதைக்கு சின்ன வீடு போதும்னு ஜோசியர் சொன்னார்”

### ரகு




### தேவா

அடிச்சது அம்மாதான்னு தெரியும்



ஆனாலும் அழுதுகொண்டே அம்மாகிட்டதான் ஓடும் குழந்தைகள்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கொரோனா தடுப்பூசிகளை வழங்குவதில் எவருக்கும் விசேட சலுகை இல்லை

(கொழும்பு)

**கொவிட் தடுப்பூசிகளை வழங்குவதற்கு சுகாதார அமைச்சினால் ஒழுங்குமுறையொன்று திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் சென்று தனவந்தர்களுக்கோ அல்லது அதிகாரமுடையவர்களுக்கோ விசேட சலுகைகள் எவையும் வழங்கப்பட மாட்டாது என ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.**



உலகின் பல நாடுகளிலும் தயாரிக்கப்பட்ட கொவிட் தடுப்பு மருந்துகளில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனிகா தடுப்பு மருந்தே பக்க விளைவுகள் மிகக் குறைவானதாகும்.

மில்லியனில் ஒருவருக்கே இதன் மூலம் பக்க விளைவு ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்தத் தடுப்பூசி மூலம் பாரிய பக்க விளைவுகள் ஏற்படக் கூடும் என்று யாரும் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் கொவிட் தடுப்பூசி வழங்குவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துகையில் இதனைக் கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

18 வயதுக்கு மேற்பட்டோருக்கே தடுப்பூசி வழங்கப்படும். இலங்கையில் மொத்த சனத்தொகையில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமானோர் 18 வயதுக்கு மேற்பட்டோராவர். அதற்கமையவே 65 வீதமானோருக்கு தடுப்பூசி வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

முதற்கட்டமாக மருத்துவர்கள் , தாதிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்டோருக்கும் இரண்டாம் கட்டமாக முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கும் மூன்றாம் கட்டமாக 65 வயதுக்கு மேற்பட்ட தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு திட்டமிட்டுள்ள ஒழுங்கு விதிமுறையை மீறி யாருக்கும் தடுப்பூசி வழங்கப்படமாட்டாது. அதாவது பணத்தை வழங்குபவர்களுக்கோ அதிகாரத்திலுள்ளவர்களுக்கோ தடுப்பூசி வழங்குவதில் எந்தச் சலுகையும் வழங்கப்பட மாட்டாதுஎனஅவர்மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# நாட்டின் சுகாதாரத்துறை பாரியளவு பின்னடைவில்

## ராஜித சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டின் சுகாதாரத்துறை குறித்து வெட்கமடைவதாக முன்னாள் சுகாதார அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உலக தரத்தில் காணப்பட்ட நாட்டின் சுகாதாரத்துறை இன்று பாரியளவு பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் கொவிட் தடுப்பூசிக்காக உலக நாடுகளிடம் பிச்சை எடுக்கும் நிலைமை உருவாகியுள்ளது எனவும், ஏனைய நாடுகள் தங்களது பிரஜைகளுக்கு தடுப்பூசி ஏற்றி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாம் அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் தாய், சேய் மரண விகிதம் மிகவும் குறைந்தளவில் காணப்பட்டதாகவும், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு நிகரானதாக காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறையில் நாடு அடைந்திருந்த அபிவிருத்தியை இந்த அரசாங்கம் பின்னோக்கி நகர்த்தியுள்ளதாக அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நல்லவர் யார்?

ஒரே ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு வித்தியாசமான ராஜா. எந்தவகையில் வித்தியாசமானவர் என்று கேட்டால் மக்களிடம் வரி வசூல் செய்வதில் கொஞ்சம் வித்தியாசமானவர்.

ஏனைய மன்னர்கள் மாதிரி இவர் நேரடியாக வரிவசூல் செய்வதில்லை. கொஞ்சம் மறைமுகமாக அதைச் செய்வார்.எப்படி என்றால்..

ஒவ்வொரு குடி மக்களுக்கும் மாதம் ஒரு மரக்கால் நெல் மக்கள் கொடுக்கிறது இல்லை.

ராஜா மக்களுக்குக் கொடுப்பார். அதாவது அரண்மனையிலேயிருந்து ஒவ்வொரு வீட்டுக்கும் நெல் வந்து சேரும்.

அந்த ஒரு மரக்கால் நெல்லை இவர்கள் வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாக ஒரு மரக்கால் அரிசியை ராஜாவுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இதுதான் அந்த ஊர் வழக்கம். ராஜா ஜனங்களுக்கு நெல்லைக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக அதே அளவு அரிசியாகத் திருப்பி வாங்கிக் கொள்வார்.இதைத் தவிர வரி ஏதும் வசூல் செய்வதில்லை. இது மேம்போக்காக பார்ப்பதற்கு ஏதோ சாதாரணமாக தெரிந்தாலும்.. குடி மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

ராஜா கொடுக்கிற நெல்லையும் அரிசியாக்க வேண்டும். அதோடு இன்னும் பாதி அரிசியை இவர்கள் சேர்த்தும் கொடுத்தாக வேண்டும்.

என்ன செய்வது? மக்கள் ராஜாவைத் திட்ட ஆரம்பித்தார்கள்? இந்த ராஜா எப்பொழுது இறப்பார் என்று எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். பல பேர் அந்த ஊரிலே வீட்டைக் காலி செய்து வெளிதேசத்திற்குப் போய்விட்டார்கள்.

மக்கள் எதிர்பார்த்த மாதிரியே நடந்தது. அந்த மன்னன் நோய் வந்து படுத்த படுக்கையாகிவிட்டான். ராஜா இப்படி சாகக் கிடக்கிறார் என்று தெரிந்தும் மக்கள் யாருமே பார்க்க வரவில்லை.

ஏன் என்னை யாருமே பார்க்க வரவில்லை.. என்று மந்திரியிடம் கேட்டார் ராஜா.எங்கள் ஊரிலே மக்கள் எங்கே இருக்கின்றார்கள் பார்க்க வருவதற்கு? என்றார் அவர்.

ஏன் என்ன ஆகிவிட்டது அவர்களுக்கு? என்று கேட்டார் இவர்.

அமைச்சர் அப்பொழுது தான் அரசனுக்கு அவன் செய்த தவறைச் சுட்டிக்காட்டினான். மக்களுக்கு இழைத்த கொடுமையை எடுத்துச் சொல்லி புரியவைத்தார்.

மன்னருக்கு ஞானோதயம் வந்து செய்த பாவங்களை எண்ணி வருத்தப்பட்டான்.மெதுவாக அமைச்சர் பக்கம் திரும்பி எங்கே என் மகன்? என்று கேட்டான்.அவர் எங்கேயாவது ஊர் சுத்திக் கொண்டிருப்பார். சூதாட்ட விடுதிகளிலே கிடப்பார் என்றார் அமைச்சர். அவன் எங்கேயிருந்தாலும் உடனே அழைத்துக் கொண்டு வா என்று உத்தரவு போட்டார் ராஜா. அடுத்த நாளே இளவரசனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

தந்தையே என்ன செய்ய வேண்டும் நான்.. சொல்லுங்கள் என்று கேட்டார். அவர் சொன்னார். மகனே மக்களுக்கு நான் பொல்லாதவனாகிவிட்டேன். அவர்கள் எல்லாம் என்னை நல்லவன் என்று சொல்ல வேண்டும். அப்படி அவர்களை சொல்ல வைக்க வேண்டியது உன்னுடைய பொறுப்பு என்றார்.

தந்தையே நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்களை மிகவும் நல்லவர் என்று மக்கள் சொல்லும் படியாக வைக்கின்றேன் என்றான் பையன்.அதற்குப் பின்பு கொஞ்ச நாளிலே பையன் பட்டத்திற்கு வந்தான். வரி வசூல் செய்கின்ற முறையில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணினான்.

இவன் என்ன செய்தான். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு மரக்கால் உமியை கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக ஒரு மரக்கால் அரிசியை வாங்கினான்.அப்பா நெல்லைக் கொடுத்துவிட்டு அரிசியாக வாங்கினார். இவன் உமியைக் கொடுத்துவிட்டு அரிசியாக வாங்கினான் கொஞ்ச காலம் ஆகிவிட்டது. ஒருநாள் மந்திரியைக் கூப்பிட்டுக் கேட்டான். அமைச்சரே மக்கள் என்ன பேசிக் கொள்கின்றார்கள். என்று விசாரித்தான்.உங்கள் அப்பன் மிகவும் நல்லவன் என்று பேசிக் கொள்கின்றார்கள் என்றார் அமைச்சர்.

எப்படி இருக்கு பாருங்க இது? அப்பாவுக்குக் கொடுத்த வாக்கைப் பிள்ளை காப்பாற்றிவிட்டான். இந்தக் காலத்திலேயும் இது மாதிரி அப்பாவுக்கு உதவுகின்ற பிள்ளைகள் உண்டு. ஒரு பிள்ளை சொன்னான். நான் எங்கள் அப்பாவுக்கு மிகவும் உதவியாக இருக்கின்றேன் என்றான். அப்படியா? உங்கள் அப்பா என்ன செய்திருக்கின்றார்? என்று கேட்டேன். சும்மா தான் இருக்கின்றார் என்றார் அவன்.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)

08

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



1983 மே எட்டாம் திகதி, யாழ்ப்பாணத்தில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் மாபெரும் பிரசாரக் கூட்டமொன்று அதன் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தலைமையில் இடம் பெற்றுக் கொண்டிருந்தது.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அதனிடையே ஆயுதங்களுடன் நுழைந்த சில விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள், வானை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தி, கூட்டத்தைக் கலைத்ததுடன், அமிர்தலிங்கத்துக்கு எதிரான கோசங்களையும் எழுப்பினார்கள்.

போராட்டத்துக்குச் சமாந்தரமாக ஜனநாயக அரசியல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே அமிர்தலிங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், தமிழ் இளைஞர் ஆயுதக் குழுக்களின் அவசியப்பாட்டை மறுக்கவில்லை அல்லது அதனை மறுக்கும் நிலையில் அவர் இருக்கவில்லை.

ஆனால், தமிழ் மக்களின் தலையெழுத்தை தீர்மானிக்கும் சக்திகளாக ஆயுதக் குழுக்கள் மாறிவிடக் கூடாது. அல்லது தமிழ் மக்களின் அரசியல் அடையாளமாக ஆயுதக் குழுக்கள் மட்டும் ஆகிவிடக் கூடாது. மாறாக, பலமான ஜனநாயக ரீதியான அரசியல் சக்தி தமிழ் மக்களிடம் இருக்க வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாக இருந்தது. அது தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர் எண்ணினார்.

**அன்றைய காலத்தில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் (தமிழர் விடுதலைக்கூட்டணி), தமிழ் இளைஞர் ஆயுதக் குழுக்களின் அவசியப்பாட்டை மறுக்கவில்லை அல்லது அதனை மறுக்கும் நிலையில் அவர் இருக்கவில்லை. ஆனால், தமிழ் மக்களின் தலையெழுத்தை தீர்மானிக்கும் சக்திகளாக ஆயுதக் குழுக்கள் மாறிவிடக் கூடாது. அல்லது தமிழ் மக்களின் அரசியல் அடையாளமாக ஆயுதக் குழுக்கள் மட்டும் ஆகி விடக் கூடாது. மாறாக, பலமான ஜனநாயக ரீதியான அரசியல் சக்தி தமிழ் மக்களிடம் இருக்க வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாக இருந்தது.**

"தேர்தலில் வெற்றிபெற தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து வெற்றி பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி, இதுபோன்ற தேர்தல்களில் மீண்டும் பங்கெடுப்பது, இலங்கை இனவாத அரசுக்கு முட்டுக் கொடுக்கும் செயலாகும்' என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் கடுமையாகக் கண்டித்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்காமல் தேர்தலில் போட்டியிட்ட மூவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

இவ் உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழ் மக்கள் வேறானதொரு முடிவை வழங்கியிருந்தார்கள். வடக்கைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 90% ஆன மக்கள் உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. விடுதலைப் புலிகளின் கோரிக்கையை புறந்தள்ளி தேர்தல் களத்தில் நின்ற தமிழர் விடுதலைக்கூட்டணியினர் பருத்தித்துறையில் 1 சதவீதமும், வல்வெட்டித்துறையில் 2 சதவீதமும், சாவகச்சேரியிலும் யாழ்ப்பாணத்திலும் 15 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்று மக்களிடையே மதிப்பிழந்தனர்.

இதுவே தமிழர் விடுதலைக் கூட்டணியின் வீழ்ச்சியின் ஆரம்பமாகும். ஏறத்தாழ ஒரு வருடம் முன்பு நடந்த மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் கூடுதலான வாக்குப் பதிவு இடம்பெற்றிருந்த நிலையில், உள்ளூராட்சித் தேர்தலில் அண்ணளவாக வெறும் 10 வீத வாக்குப் பதிவே இடம்பெற்றிருந்தமை ஒரு பெரிய மாற்றமாகும். தமிழ் அரசியல் தலைமைகளின் மீதான தமிழ் மக்களின் விரக்தியும் நம்பிக்கையீனமும் தமிழ் இளைஞர் ஆயுதக் குழுக்களின் மீதான அனுதாபமும் நம்பிக்கையும் தமிழ் மக்களின் இந்த மாற்றத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறப்பட்டது.

**வடக்கைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 90% ஆன மக்கள் உள்ளூராட்சித் தேர்தல் (மாநகர சபை மற்றும் நகர சபைத் தேர்தல்கள்) வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. தேர்தல் களத்தில் நின்ற தமிழர் விடுதலைக்கூட்டணியினர் பருத்தித்துறையில் 1 சதவீதமும், வல்வெட்டித்துறையில் 2 சதவீதமும், சாவகச்சேரியிலும் யாழ்ப்பாணத்திலும் 15 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்று மக்களிடையே மதிப்பிழந்தனர்.**

விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையிலான வடமாகாணத்தின் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் சாவகச்சேரி நகரசபைகளின் 1983ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் அட்டவணை3,4 மற்றும் 5 இல் காட்டப்பட்டுள்ளன.

### பருத்தித்துறை நகரசபைத் தேர்தல்-1983

பழைய தேர்தல் முறையில் பருத்தித்துறை நகரசபைப் பகுதி 9 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முன்னர் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் தனித்தன்யாகப் பிரதிநிதிகள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் கட்சிகள் சமர்ப்பிக்கும் பட்டியலில் இருந்து (விருப்பு வாக்கு முறையல்ல) அக்கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்தின் அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

(அட்டவணை-3ஐப் பார்க்க)

அட்டவணை-3

| கூட்டணிகளும் கட்சிகளும் | வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி | 82 | 71.30 | 7 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 27 | 23.48 | 2 |
| சுயேச்சை | 6 | 4.35 | 0 |
| நவ சமசமாசக் கட்சி | 1 | 0.87 | 0 |
| செல்லுபடியான வாக்குகள் | 115 | 100 | |
| செல்லாத வாக்குகள் | 0 | | |
| மொத்த வாக்குகள் | 115 | | |
| பதியப்பட்ட வாக்காளர்கள் | 10928 | | |
| வாக்களித்தோர் | 1.05% | | |

### சாவகச்சேரி நகரசபைத் தேர்தல்-1983

பழைய தேர்தல் முறையில் சாவகச்சேரி நகரசபைப் பகுதி 11 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முன்னர் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் தனித்தனியாகப் பிரதிநிதிகள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் கட்சிகள் சமர்ப்பிக்கும் பட்டியலில் இருந்து (விருப்பு வாக்கு முறையல்ல) அக் கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்தின், அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்ட னர். (அட்டவணை-5ஐப் பார்க்க)

அட்டவணை-4

| கூட்டணிகளும் கட்சிகளும் | வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி | 173 | 94.02 | 9 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | 7 | 3.80 | 0 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 4 | 2.17 | 0 |
| செல்லுபடியான வாக்குகள் | 184 | 100.00 | 9 |
| செல்லாத வாக்குகள் | 0 | | |
| மொத்த வாக்குகள் | 184 | | |
| பதியப்பட்ட வாக்காளர்கள் | 8,954 | | |
| வாக்களித்தோர் | 2.05% | | |

### வல்வெட்டித்துறை நகரசபைத் தேர்தல்-1983

பழைய தேர்தல் முறையில் வல்வெட்டித்துறை நகரசபைப் பகுதி 9 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முன்னர் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் தனித்தனியாகப் பிரதிநிதிகள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் கட்சிகள் சமர்ப்பிக்கும் பட்டியலில் இருந்து (விருப்பு வாக்கு முறையல்ல) அக்கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்தின் அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

(அட்டவணை-4ஐப் பார்க்க)

அட்டவணை-5

| கூட்டணிகளும் கட்சிகளும் | வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி | 1,718 | 92.12 | 11 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | 109 | 5.84 | 0 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 38 | 2.04 | 0 |
| செல்லுபடியான வாக்குகள் | 1,865 | 100.00 | 11 |
| செல்லாத வாக்குகள் | 20 | | |
| மொத்த வாக்குகள் | 1,885 | | |
| பதியப்பட்ட வாக்காளர்கள் | 12,059 | | |
| வாக்களித்தோர் | 15.64% | | |

(தொடரும்...)

# விலை உயர்வைக் கண்டித்து ஜே.வி.பியினர் போராட்டம்



(நுவரெலியா)


மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாயை வழங்குமாறு வலியுறுத்தியும் பொருட்கள், சேவைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பூண்டுலோயா நகரில் போராட்டம் நடைபெற்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் மஞ்சுள சுரவீர தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தப் போராட்டம் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

"வாழ்க்கைச்சுமை அதிகரித்துள்ளதால் மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நிவாரணம் வழங்க வேண்டிய அரசாங்கம், மாறாக பொருட்களின் விலைகள் அதிகரித்து வருகின்றது.

இதனை எம்மால் ஏற்கமுடியாது. ஆகவே, பொருட்கள், சேவைகளின் விலைகள் உடனடியாகக் குறைக்கப்பட வேண்டும்" என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன் - எதற்கு - எப்படி



## உற்சாகம் தரும் பிரமோற்சவம்

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆலயங்களை கட்டிய நம் முன்னோர்கள் அந்த ஆலயங்களில் தினமும் எத்தனை தடவை பூஜை செய்ய வேண்டும்? எப்போது பூஜை செய்ய வேண்டும்? வாரத்துக்கு ஒரு தடவை எத்தகைய பூஜை முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்? மாதத்துக்கு ஒரு தடவை என்னென்ன வழிபாடுகள் செய்ய வேண்டும் என்று கணித்து நடைமுறைப்படுத்தினார்கள்.

அது மட்டுமின்றி எந்தெந்த மாதங்களில் விழாக்கள் நடத்த வேண்டும் என்ற பழக்கத்தையும் ஏற்படுத்தினார்கள்.

இந்த விழாக்கள் எல்லாம் பக்தர்களை ஆலயத்துடன் நெருங்க வைக்கும் இயல்பு கொண்டவை.

அதோடு இந்த விழாக்கள் ஒவ்வொன்றும் இறைவன் மீதுள்ள ஆத்மார்த்தமான பக்தியை மக்கள் மனதில் ஆழப் பதிந்து விட செய்து விட்டவையாகும்.

இந்த விழாக்களில் முதன்மையானது உற்சவங்களில் ஒன்றான பிரமோற்சவம் ஆகும்.

தமிழ்நாட்டில் உள்ள பழைமையான ஆலயங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டுக்கு ஒரு தடவை மிக விமரிசையாக பிரமோற்சவம் நடத்தப்படுகிறது.

இந்த விழா அந்தந்த ஆலய தல வரலாற்றுடன் தொடர்புடையதாகவும் இருக்கும். பொதுவான உற்சவங்கள் என்பது இந்த உலகில் உள்ள உயர்வான படைப்புகளின் விருத்திக்காகவே நடத்தப்படுவதாகக் கூறப்படுவதுண்டு.

எனவே உற்சவங்கள் ஒவ்வொரு ஆலயத்திலும் தவறாமல் நடத்தப்பட வேண்டும் என்று ஆகம விதிகளில் கூறப்பட்டுள்ளது.

இந்த உற்சவங்கள் ஒவ்வொன்றும் ஆலய வழிபாட்டின் சூட்சுமத்தை பொதிந்து வைத்துள்ளது.

ஆகையால் சக்திவாய்ந்த ஆலயங்களில் முறைப்படி பிரமோற்சவம் நடத்தப்படாவிட்டால் அது ஆட்சியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் தீய விளைவுகளைக் கொடுத்து விடும் என்று ஞானோத்திர ஆகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பிரமோற்சவம் நடத்தப்படாவிட்டால் அந்தப் பகுதி மக்களுக்கு கிரகபீடை, நோய்கள், ஆயுள் குறைவு போன்றவை ஏற்படும் என்றும் அந்த ஆகமத்தில் ஏழுதி வைக்கப்பட்டுள்ளது.

நம் முன்னோர்கள் ஆலயங்களில் நடக்கும் உற்வசங்களை ஆறு வகையாகப் பிரித்துள்ளனர்.

அவை வருமாறு,

1.பைத்ருகம் எனும் உற்சவம் 12 நாட்கள் நடைபெறும்.

2.சவுக்கியம் எனும் உற்சவம் 9 நாட்கள் நடைபெறும்.

3.ஸ்ரீகரம் என்ற உற்சவம் 7 நாட்கள் நடைபெறும்.

4.பார்த்திவம் எனப்படும் உற்சவம் 5 நாட்கள் நடைபெறும்.

5.சாத்வீகம் எனும் உற்சவம் 3 நாட்கள் நடைபெறும்.

6.சைவம் என்ற உற்சவம் ஒரே ஒரு நாள் மட்டுமே நடக்கும்.

9 நாட்களுக்கு மேல் நடக்கும் உற்சவங்களையே பிரமோற்சவம் என்று சொல்வார்கள். மிகப்பெரிதாக இருப்பதை "பிரம்மா" என்பார்கள். எனவே நீண்ட நாட்கள் நடக்கும் உற்சவத்தை பிரமோற்சவம் என்கிறார்கள்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## ஒன்லைன் விசாவை கோரும் வெளிநாட்டவர்கள்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தைத் திறந்த பின்னர் இலங்கை வருவதற்காக 198 வெளிநாட்டவர்கள் விண்ணப்பித்துள்ளதாகக் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பேச்சாளர் கயான மிலிந்த தெரிவித்துள்ளார்.

விசா விண்ணப்பித்த நபர்களின் தரவுகள் ஏற்கனவே சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. எனினும் பாதுகாப்புக் காரணத்திற்கமைய இலங்கைக்கு அழைக்க முடியாத நபர்களைத் தவிர்த்து ஏனைய அனைவருக்கும் விசா வழங்கப்படும்.

கடந்த 21 ஆம் திகதிக்கு முன்னர் ஒன்லைன் மூலம் விசா விண்ணப்பிக்கும் செயற்பாடு நிறுத்தப்பட்டுள்ளது. எனினும் அந்தச் செயற்பாட்டை மீள ஆரம்பிக்குமாறு வெளிநாட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-4)

## குழிக்குள் விழுந்து ஒருவர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவின் கொம்மாதுறை தீவு - பிரப்பம் வளைவு பகுதியில் உள்ள வீதியில் குழிக்குள் குடும்பத்தோடு விழுந்து மூழ்கிய மீனவர் ஒருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வந்தாறுமூலையில் வசிக்கும் பேதுறு சிவராசா (வயது - 62) என்பவரே சேறும் சகதியும் நிறைந்த குழிக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் தனது மனைவி மற்றும் 9 வயது மற்றும் 13 வயதுடைய பேரப்பிள்ளைகள் இருவருடனும், பிரப்பம் வளைவுப் பகுதியிலுள்ள வீதியைக் கடந்தபோது அங்கு தண்ணீர் நிரம்பியிருந்த வீதியிலுள்ள ஆழமான குழிக்குள் குடும்பத்தோடு விழுந்து சேற்றில் மூழ்கியுள்ளார்.

மனைவி மற்றும் பேரப்பிள்ளைகள் உயிருடன் மீட்கப்பட்டதுடன் இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 280 | 320 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 700 | 600 | 600 |
| தக்காளி | 150 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 60 |
| கோவா | 80 | 80 | 100 |
| கரட் | 160 | 180 | 200 |
| பூசணி | 140 | 130 | 240 |
| புடோல் | 180 | 140 | 200 |
| வாழைக்காய் | 50 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 450 | 450 | 600 |
| பெரிய வெங்காயம் | 80 | 70-80 | 100 |
| பாகற்காய் | 300 | 260 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 300 | 350 | 350 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 180 | 180 | 240 |
| கறிமிளகாய் | 350 | 280 | 400 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 260 | 270 | 280 |
| கத்தரிதம்புள்ள | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 80 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 70-80 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | -- | 100 |



# சிறுவர் அரங்கம்

## ஞானியும் பாம்பும்

ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஒரு கொடிய விடமுள்ள பாம்பு வாழ்ந்து வந்தது. ஊர் மக்கள் யாராவது அதன் புற்றின் பக்கம் போனால் சீறி வந்து கொத்தி விடும்.

பாம்புப் புற்று இருந்த பாதை அந்த ஊருக்கும் பக்கத்து சந்தைக்கும் குறுக்கு வழி. பாம்புக்கு பயந்தே ஊர் மக்கள் பல தொலைவு சுற்றி அந்த சந்தைக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள்.

வேறு வழியில்லாததால் சலிப்புடனேயே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு யோகி வந்தார். அவர் மிருகங்களிடம் பேசக் கூடிய வரம் பெற்றவர். ஊர் மக்கள் தங்கள் குறையை அவரிடம் முறையிட்டனர்.

அவர் பாம்பிடம் பேசி அதற்கு ஊர் மக்களை கடிக்கக் கூடாது என்று கட்டளை இட்டு விட்டு பக்கத்து ஊருக்குச் சென்று விட்டார். பாம்பும் அவர் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடந்தது.

ஆனால் ஊர் மக்கள் சும்மாயில்லை. வழியே போகும் சிறுவனுக்குக் கூட பாம்பிடம் இருந்த பயம் போய் விட்டது.

பாம்பைக் கண்டால் அதைக் கல்லால் அடிப்பது, துன்புறுத்துவது, விரட்டியடிப்பது என்று அதன் வாழ்க்கையை நிம்மதியில்லாமல் செய்து கொண்டிருந்தனர். உடம்பில் பல காயங்களுடன் குற்றுயிரும் குலையுயிருமாகி விட்டது பாம்பு.

யோகி ஒரு நாள் பாம்புப் புற்று இருந்த வழியாக ஊருக்குள் திரும்ப வரும் போது பாம்பின்



பரிதாபமான நிலையைக் கண்டு அதனை விசாரித்தார். பாம்பும் நடந்த கதையையெல்லாம் கூறி அழுதது.

யோகி பாம்பைப் பார்த்து "அட முட்டாள் பாம்பே! உன்னை மக்களைக் கடிக்க வேண்டாம் என்றுதானே கூறிச் சென்றேன். பக்கத்தில் வருபவனைப் பார்த்து சீறாதே என்று ஒருபோதும் சொல்லவில்லையே" என்று கேட்டார். இதற்குப் பின் பாம்பும் பிழைத்துக் கொண்டது.

**நீதி: உங்கள் இயல்பை மற்றவர்களுக்காக மாற்றிக்கொள்ளாதீர்கள்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கௌகமேலா நாயகன்

வியூகம் அமைப்பதில் அலெக்சாண்டருக்கும் டேரியஸுக்கும் கடுமையான போட்டி நடந்து கொண்டிருந்தது.

அலெக்சாண்டரின் படைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அலெக்சாண்டரும் பார்மீனியோவும் ஆளுக்கொரு பிரிவுக்குத் தலைமையேற்றிருந்தார்கள்.

இந்த யுத்தத்துக்கென பிரத்தியேகமாக ஒரு வியூகத்தை உருவாக்கியிருந்தார் அலெக்சாண்டர்.

பாரசீகக் குதிரைப் படை எந்தளவுக்கு முன்னேறிச் செல்ல முடியுமோ அந்தளவுக்கு முன்னேறட்டும். அதன்பிறகு கிடைக்கும் இடைவெளியை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

97



இதுதான் அலெக்சாண்டரின் வியூகம். அப்படிச்செய்வதன் மூலம் நடுவில் இருக்கும் டேரியஸை எளிதில் நெருங்கிவிடலாம் என்பது அவருடைய திட்டம்.

இம்முறை நான் தாக்குதலைத் தொடங்கப் போவதில்லை. கர்வமாகக் கூறினார் டேரியஸ். எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

ஏற்கனவே நடந்த யுத்தங்களில் எல்லாம் தோற்று ஓடியாகி விட்டது. இப்போது என்ன வீராப்பு? இதில் எங்கே இருக்கிறது புத்திசாலித்தனம்?

டேரியஸின் தளபதிகளுக்கு ஒன்றுமே புரியவில்லை. அதற்காக எதிர்த்துப் பேசவும் முடியாது. எதிர்த்துப் பேசலாம் என்று நினைத்த மாத்திரத்தில் தலையைக் கொய்துவிடக் கூடியவர் டேரியஸ். வீராப்பு அதிக நேரம் தாக்குப் பிடிக்கவில்லை.

சிறிது நேரத்திலேயே தாக்குதலைத் தொடங்கினார் டேரியஸ். முதலில் தயாராக இருந்த தேர்ப்படைகள்தான் அலெக்சாண்டரின் படைகளின் மீது ஏவப்பட்டன.

அடுத்த சில நிமிடங்களில் தேரோட்டிகளின் கழுத்தைக் குறிவைக்க உத்தரவிட்டார் அலெக்சாண்டர். ஈட்டிகள் பாய்ந்தன.

விளைவு தேரோட்டிகளின் தலைகள் சக்கரங்களாக உருமாறி உருண்டோடத் தொடங்கின. டேரியஸ் அதிகபட்சமாக நம்பிக்கை வைத்திருந்த தேர்ப்படையின் அச்சு முறிந்தது.(தொடரும்)

பிறருடைய துன்பங்களை நினைத்துப் பார்ப்பதால் நம்முடைய துன்பங்களைச் சகிக்க கற்றுக் கொள்கிறோம். *- மார்க் ட்வைன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கை மின்சார சபை தமிழ் மக்களை வஞ்சிக்கிறதா?

இப்போதெல்லாம் சோலர் மூலமான மின் உற்பத்தி பற்றிய விடயம் வீடுகள் தோறும் பேசுபடுபொருளாகியுள்ளது.

மின்சாரக் கட்டண அதிகரிப்பும் மின்சாரத்துக்கான அதிகரித்த கேள்வியும் காரணமாக சோலர் பயன்பாட்டை மக்கள் நாடியுள்ளனர்.

இதற்கு மேலாக, வீடுகள் மற்றும் நிறுவனங்களில் சோலர் பொருத்துவதற்கு வங்கிகள் மூலம் நீண்டகாலக் கடன்கள் வழங்கப்படுவதுடன் அது தொடர்பான விழிப்புணர்வு சார்ந்த விளம்பரங்களை வங்கிகள் தாராளமாகச் செய்கின்றன.

இவை ஒருபுறமிருக்க, சோலர் பொருத்துவதற்கான வங்கிக் கடன்களுக்கு இதுவரை எட்டு வீத வட்டி அறவிடப்பட்ட நிலையில், தற்போது சோலர் மின் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு எட்டு வீத வட்டி நான்கு வீதமாகக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய வட்டிக்குறைப்பு வீடுகளில் சோலர் பொருத்துவதை ஊக்குவிக்கும் எனக் கருதப்பட்டாலும் இந்தக் கிடைப்பனவை அனுபவிக்கின்ற பொசிப்பு வட பகுதி மக்களுக்கு இல்லை என்பதுதான் மிகப்பெரிய துன்பம்.

ஆம், சோலர் மின் உற்பத்திக்கான அனுமதியைக் கேட்டு வடபகுதிக்குட்பட்ட மின்சார சபைக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படும் போது அவை நிராகரிக்கப்படுகின்றன.

இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்தின் உத்தரவுக்கமைய சோலர் மின் உற்பத்திக்கான புதிய அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகப் பதில் அளிக்கப்படுகிறது எனில், குறைந்த வட்டியில் சோலர் பொருத்துகின்ற பலன் வடபகுதித் தமிழ் மக்களுக்கு இல்லை என்பதுதானே பொருள்.

உண்மை, குறைந்த வட்டியில் கடன் பெறுகின்ற அறிவிப்புகள் வெளிவரும் போதெல்லாம் அதன் நன்மைகளைத் தமிழ் மக்கள் அனுபவிக்கக்கூடாது என்பதில் தென்பகுதி மிகவும் விழிப்பாக இருக்கிறது.

அந்த அடிப்படையிலேயே சோலர் மின் உற்பத்திக்கான வங்கிக்கடன் குறைந்த வட்டியில் வழங்கப்படுகின்றபோது, வடபகுதித் தமிழ் மக்களுக்கு சோலர் மின் உற்பத்திக்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

மின் உற்பத்தியை உள்வாங்கக்கூடிய வலிதான மின்பிறப்பாக்கிகள் இல்லாத காரணத்தால், அனுமதிகள் மறுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு கூறப்படுவதில் இருக்கக்கூடிய நியாயத்துவங்கள் ஏற்புடையவையா? என்பதை எங்கள் வடபகுதி மின்சார சபை அதிகாரிகள்தான் தீர்மானிக்க வேண்டும்.

எதுவாயினும் சோலர் மூலமாக மின் உற்பத்தியை ஊக்குவிக்கின்ற எண்ணத்தில் இனவாதம் கலக்கவில்லை என்றால், அதிகளவு வெப்பம் - அதிக நாட்கள் சூரியஒளி கிடைக்கக்கூடிய வடபகுதியிலேயே அதிகளவு சோலர் பனல் பொருத்தப்பட்டு மின் உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

ஆனால் நொண்டிச்சாட்டுகளுடன் எங்கள் தமிழ் மக்களுக்கு இலங்கை மின்சார சபையும் வஞ்சம் செய்கிறது என்பதே உண்மை.

என்ன செய்வது நாங்கள் தமிழர். மனம் நொந்து வேதனைப்படுகின்ற உரிமைக்கு மட்டுமே உரித்தான நாங்கள் அவ்வண்ணமே உரிமையை அனுபவிக்கின்றோம்.

# யாழில் அமைக்கப்பட்டுள்ள நெடுந்தூர பேருந்து நிலையத்தில்

## தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள நெடுந்தூர பேருந்து நிலையத்தில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை என யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வர் து.ஈசன் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்தோடு தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்படாது விட்டால், தான் பேருந்து நிலைய திறப்பு விழாவில் கலந்துகொள்ளப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நேரத்தில் இருக்கும் ஒரு பிரச்சினை வடகிழக்கின் நிர்வாக மொழியான தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு பெயர் பலகையில் இரண்டாவது இடத்தில் இருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

அத்தோடு இங்கு இருக்கும் வர்த்தக நிலையங்கள் சகல நிறுவனங்களிலும் எங்களுடைய மொழிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என நாங்கள் ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றோம். அவ்வாறான இடங்களை நாங்கள் திருத்தி அமைத்துக் கொண்டு வருகின்ற சூழ்நிலையில் இவ்வாறு இடம்பெற்றுள்ளது மன வருத்தத்திற்குரியது என்றார்.(ம-3,33)

# இந்திய விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக

## யாழில் இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக யாழில் இன்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கவுள்ளதாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் அன்ரனி யேசுதாசன் தெரிவித்தார்.

யாழ். ஊடக மன்றத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய விவசாயிகள் 140 நாட்களைத் தாண்டியும், போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், இன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்பதாக போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம் என்றார். (ம-3,33,101)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** பருத்தித்துறை 3 ஆம் குறுக்குத் தெரு, சிவப்பிரகாசம், தும்பளை, வெளிச்சவீடு, நெல்லண்டை, மாதனை, கற்கோவளம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, புனிதநகர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பிரதேசம், சங்கானை சந்தை பிரதேசம், முள்ளியடி பிரதேசம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** உயிலங் குளத்திலிருந்து சிறுநாவற்குளம் வரை, கமலாம்பிகை அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# விவசாயப் போதனாசிரியர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைத் திகதி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் விவசாயப் போதனாசிரியர் தரம்-III பதவிக்கு ஆட்சேர்ப்புச்செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டு கொவிட்-19 பரவல் சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட வடக்கு மாகாணப்பொதுச்சேவை ஆணைக்குழுவின் விவசாயப் போதனாசிரியர் தரம்-III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் மீளவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/ 48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயளாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார்.(ஜ-4)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## உள்ளத்தை திறந்து வை

❖ இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம், குரல், தோற்றம் எல்லாமே மாறிவிடும். நீங்கள் மனிதகுலத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பீர்கள்.

❖ நாம் செலுத்தும் பணிவுக்கும் மரியாதைக்கும் பிரதிபலனாக, இறைவன் ஏதாவது ஒரு நலனைத் தரவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கும் வரை, உண்மையான பக்தி ஏற்படாது.

❖ நமது உள்ளத்தை திறந்து வைத்திருந்தால், உலகிலுள்ள நல்ல நினைவுகள் அனைத்துக்கும் உரிமையுள்ளவர்கள் ஆகிவிடுவோம்.

❖ தன்னை அடக்கப் பழகியவன் வெளியே உள்ள எதற்கும் வசப்படமாட்டான். அவனுக்கு அதன்பின் அடிமைத்தனமும் இல்லை, அவனது மனமும் விடுதலை பெற்றுவிடுகிறது. அத்தகையவனே உலகத்தில் நன்றாக வாழும் தகுதி பெற்றவனாகிறான்.

❖ இறைவனுக்குப் பணி செய்ய விரும்புபவன் முதலில் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் பணி செய்ய வேண்டும். இறைவனது தொண்டர்களுக்குத் தொண்டு செய்பவர்களே அவரது உத்தமத் தொண்டர்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.


# இந்தியப் படகுகளால் அபாயம்; அகற்றுமாறு மீனவர்கள் கோரிக்கை

(தருமபுரம்)

கிளிநொச்சி கிராஞ்சி கடலில் இலங்கை கடல் எல்லைகளில் பறிமுதல் செய்யப்படும் இந்திய படகுகளை கடற்படை கிராஞ்சி கடலில் நிறுத்துவதால் கடல் வளம் பாதிக்கப்படுவதாகவும் தொழில் நடவடிக்கைக்கு இடையூறாக அமைவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

வேறு மாவட்ட கடற் பரப்புக்களில் கைது செய்யும் படகுகளைக்கூட கடற்படை இங்கே தான் கொண்டு வருவதாகவும் மீனவர்கள்சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீண்டகாலமாக படகுகள் காணப்படுவதால் சில கடலில் மூழ்கி காணப்படுவதாகவும்



இயந்திரங்களிலிருந்து ஒயில் கூட நீரில் கலப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே குறித்த இந்திய படகுகளை அகற்றி தமது கடல் வளத்தை பாதுகாக்குமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-4-5-316)

# ரோஹித மீதான வழக்கு பெப்ரவரியில் விசாரணைக்கு

(கொழும்பு)



அமைச்சர் ரோஹித அபே குணவர்தனவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு பெப்ரவரி மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதிபதி அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியில் 41.2 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை சட்டவிரோதமாக கையகப்படுத்தியதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. (ஜ-4)

# அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை தேசிய வளங்களை விற்பனை செய்வதாகும்

## பிமல் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ராஜபக்ஷவினரின் முகத்தில் தேசப்பற்று இருந்தாலும் அவர்கள் நடைமுறைப்படுத்துவது ரணில் விக்கிரமசிங்க, சந் திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நடைமுறைப்படுத்திய புதிய தாராளமயவாத பொருளாதார கொள்கை என மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் பிமல் ரத்நாயக்க இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா கோருவதாலோ அல்லது அழுத்தம் கொடுப்ப தாலோ கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை தேசிய வளங்களை விற்பனை செய்வது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஜ-4)


பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,யாழ்ப்பாணம்
ஏல விற்பனை - ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை

| தொடர் இலக்கம் | விபரம் | இடம் |
|---|---|---|
| 01 | கட்டட நிர்மாணிப்பின் போது அகற்றப்பட்ட பழைய கல்லுடன் சேர்ந்த மண் - 120 கியூப் | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை |

மேற்படி ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறையில் கட்டட நிர்மாணிப்பின் போது அகற்றப்பட்ட பழைய கல்லுடன் சேர்ந்த மண்-120 கியூப் 29.01.2021 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு ஆதார வைத்திய சாலை பருத்தித்துறையில் ஏல விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
(சி-1254) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.


# மேலும் 189 சுற்றுலாப்பயணிகள் உக்ரேய்னிலிருந்து வருகை

(கொழும்பு)

உக்ரேய்னைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளில் மேலும் சிலர் மத்தள சர்வதேச விமான நிலையத்தினூடாக நாட்டுக்கு வந்தடைந்தனர்.

உக்ரேய்ன் விமான சேவைகளுக்குச் சொந்தமான பி.எஸ். 6385 ரக விமா னத்தில் 189 சுற்றுலாப் பயணிகள் இவ் வாறு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு அழைத்து வரும் திட்டத்தின் கீழ் இவர் கள் நாடு திரும்பியுள்ளனர் என்பதுடன் இந் நாட்டிற்கு வருகை தந்த 12 ஆவது உக்ரேய்ன் நாட்டு சுற்றுலாக் குழுவினர் இவர்களாகும்.

இதேவேளை உக்ரேய்னிலிருந்து வருகை தந்திருந்த 178 சுற்றுலாப் பயணிகள் மீண்டும் உக்ரேய்ன் நோக்கிப் புறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


# மரண அறிவித்தல்

## திருமதி அருந்ததி நடராசா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்ததி நடராசா நேற்று (25.01.2021) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பெரியதம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் லஜிதா, பகிஷ்கரன், லாவண்யா ஆகியோரின் பாசமிகு தாயாரும் விக்கினேஸ்வரன், சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயராணி, சிவகுருநாதன், இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகாலிங்கம், கிருபாலினி, பாலேந்திரன், காலஞ்சென்ற சண்முகலிங்கம் பாக்கியம், அன்னலட்சுமி மற்றும் சரஸ்வதி, இரங்காதேவி ஆகியோரின் மைத்துனியும் இராசமணியின் பெறாமகளும் துரைராசா, பேரம்பலம் ஆகியோரின் மருமகளும் சருணா, சமிக்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.01.2021) செவ்வாய்க்கிழமை இல. 86, திருமகள் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1254)

இல. 86, திருமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்


# பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பம்

(அக்கராயன்)

கிளிநொச்சிக்கான மத்திய பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகள் கடந்த சில ஆண்டுகளாக கைவிடப்பட்டிருந்த நிலையில் தற்போது மீண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் 16,365 867 ரூபா நிதி ஒதுக்கீட்டில் கட்டுமானப் பணிகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2021ஏப்ரல் மாதம் பேருந்து நிலையத்தின் பணிகள் நிறைவுறுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ஜ-4-350)



சுகாதாரமான கிளிநொச்சி எனும் தொனிப் பொருளில் கிளிநொச்சி றோட்டறிக்கழகத்தினால் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர்கள், பதவிநிலை அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் இந்த செயற்றிட்டத்தில் பங்குகொண்டனர். (படம்:-சப்த சங்கரி)

## நீதிமன்றால்...

தண்டனைத் தீர்ப்பு வழுங்கி மல்லாகம் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்து தீர்ப்பு வழுங்கியது.

நாட்டுப் படகில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அவர்கள் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமையால் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கரடி தாக்கியதில்...

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தில் கோம்பாவில் புதுக்குடியிருப்பினை சேர்ந்த 39 வயதுடைய இரண்டு பிள்ளை களின் தந்தையே இவ்வாறு கைவிரல் ஒன்று முறிந்த நிலையிலும் காலிலும் கையிலும் கரடியின் கடிகாயங்களுக்கு உள்ளான நிலையிலும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3,281)

## பி.சி.ஆர்...

நிலையத்துக்கு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் சீல் வைக்கப்பட்டது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் பிரதேசத்திலுள்ள அதிக ஆபத்துநிலைக்குரியவர்களை இனங்கண்டு அவர்களுக்கான பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை பிசிஆர் பரிசோதனைக்காக குறித்த வாகன சுத்திகரிப்பு நிலைய ஊழியர்கள் அழைக்கப்பட்டிருந்தபோதிலும் அவர்கள் பரிசோதனைக்கு சமுகமளிக்கவில்லை.

இதுதொடர்பாக பொது சுகாதார பரிசோதகர்கள் அவ்விடம் சென்று பரிசோதித்த போது அதன் உரிமையாளர் ஒத்துழைக்கவில்லை என்று பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே கொரோனா கட்டுப்பாட்டுக்கு ஒத்துழைக்க மறுத்து பிசிஆர் பரிசோதனையில் பங்குபற்றாமையினால் எதிர் வரும் பிசிஆர் பரிசோதனைக்கு உட்பட்டு முடிவுகள் கிடைக்கும்வரை அந்த நிறுவன செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தி சீல் வைக்கப்பட்டதோடு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நீண்ட தூர பயணங்களிலீடுபடும் பேருந்துகளின்சாரதிமற்றும்நடத்துநரும் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்த பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,60)

## கட்டடம் இடிந்து...

நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அளவெட்டி மேற்கைச் சேர்ந்த மகாதேவன் பிரகலாதன் (வயது - 40) என்னும் குடும்பஸ்தரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழுந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## யாழில் இடம்...

சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி திருமண வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்த பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான 69 வயதுடைய சந்திரசேகரம்பிள்ளை சாதிலிங்கம் என்பவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை உடுப்பிட்டி வீதி தொண்டைமானாறைச் சேர்ந்த 62 வயதுடைய அரியதாஸ் பங்கசராணி என்ற குடும்பப் பெண் கடந்த 21ஆம் திகதி ஊறணி வைத்தியசாலைக்கு பேருந்தில் சென்று இறங்கி நடந்து சென்ற வேளை தனியார் பேருந்து மோதியதில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி கடந்த சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இருவரினதும் மரண விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## வசந்த யாப்பா...

வசந்த யாப்பா பண்டாரவுக்கு கோவிட் - 19 நோய்த் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதுவரை, ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியும் அடங்குவார். (ம-3)

## வடக்கில் நேற்றும்...

களில் நேற்றுத் திங்கட்கிழமை 758 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்களில் வட மாகாணத்தில் 8 பேருக்கும் கோப்பாய் சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெறும் தென்னிலங்கையைச் சேர்ந்த 4 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அந்தவகையில் யாழ்.மாவட்டத்தில் 5 பேருக்கும், கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவருக்கும் கோப்பாய் சிகிச்சை மையத்தில் 4 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,18)

## இந்திய மீனவர்...

நாளை புதன்கிழமை யாழ்.மாவட்டத்தில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் இடம் பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன தலைவர் அன்னராசா தெரிவித்தார்.

தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை இந்த அரசாங்கம் தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுத்து நாளை புதன்கிழமை யாழ்ப்பாண நகரில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது என்றார். (ம-3,33,101)

## யாழ்ப்பாண...

தெரிவு செய்யப்பட்டு 'நேர்மைக்கு மகுடம்' விருது பெற்றுள்ளார்.

ரான்ஸ்பரன்ஸி இன்ரநஷனல் ஸ்ரீ லங்கா (Transparency International Sri Lanka) நிறுவனத்தால் ஊழலற்ற நிர்வாகத்துக்கான குறுஞ்செய்தி அனுப்பும் வாக்கெடுப்பில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் பொதுமக்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டார். (ம-3)

## இராணு...

பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ளமையை சுட்டிக் காட்டினார்.

அத்தோடு கிராமசேவகர் முதல் மாவட்ட செயலாளர்கள் வரையிலான அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வருவது இதுவே முதல் முறை என்றும் 25 மாவட்டங்களுக்கும் பாதுகாப்பை மேற்பார்வையிட இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமையையும் அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும் எதிர்காலத்தில் இராணுவ அதிகாரிகள் கிராமசேவகர் பிரிவுகளுக்கும் அமைச்சின் செயலாளர்களாகவும் நியமிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்றும் தலதா அத்துகோரல குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## ஆயுதப்...

பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக இதுவரை வெளியான அறிக்கைகளில் மிகக் காட்டமான அறிக்கை இம்முறையே தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடந்த 10 வருடங்களாக வலியுறுத்தி வந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தையும் இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. நாம் அதனை வலியுறுத்தியபோது, மோடர்கள், ஒன்றும் தெரியாதவர்கள் என பலர் கேலி செய்தனர். இன்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரே அதை ஏற்றுக் கொண்டுள்ளார். இதைவிட எமக்கு பெரிய அங்கீகாரம் கிடையாது.

ஐ.நா மனித உரிமைகள் உயர் ஸ்தானிகராலயம் இலங்கை தொடர்பாக இதுவரை வெளியிட்ட அறிக்கைகளில் ஆக்கபூர்வமானதாக இந்த அறிக்கையை கருதக்கூடியதாக உள்ளது. இதில் ஒரு சில குறைபாடுகள் இருக்கின்றன.

30/1 தீர்மானத்தின் பின் நோக்கமும் அதன் முக்கியத்துவமும் என்ற தலைப்பில், ஏழாவது சரத்தில் முக்கியமான அம்சம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக அரசு திட்டமிட்டு மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின்னணியில்தான் ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்றது என்பதை முதன் முறையாக ஐ.நா ஏற்றுக்கொண்டுள்ளது என்றார். (ம-3,18)

## எங்கள் விருப்ப...

உள்ளடங்கலாக 15 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படுவதை கண்டித்து மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கடற்படையின் ஆக்கிரமிப்பில் உள்ள குறித்த காணிகளில் உள்ள "காஞ்சதேவ" கடற்படை முகாமின் தேவைக்காக நிரந்தரமாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இதனை எதிர்த்தே காணி உரிமையாளர்கள் முறைப்பாடு பதிவு செய்திருக்கின்றனர். (ம-3)































## கட்டடம் வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்தி அருகாமையில் 2ஆம் தளத்தில் 3 கடைகளும் 3ஆம் தளத்தில் 3 கடைகளும் தனியார் கல்வி நிலையம், களஞ்சியசாலையாகவும் பயன்படுத்தவும் உகந்தது.

தொடர்பு:- குரு (5401)

**076 221 2037**

## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (5393)

## கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

T.P: 021 720 1005



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராச வீதியில் ராச வீதி சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

இரண்டு பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். (5401)

**077 805 1655**

**077 596 3845**



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

தைப்பூச விழா - 28.01.2021

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் " தைப்பூச விழா " 2021.01.28 ஆம் திகதி வியாழக் கிழமை அன்று வழமைபோல் நடைபெறவுள்ளது.

*அன்றைய தினம் அம்பாளுக்கு*

| | |
|---|---|
| மு.ப 9.30 மணிக்கு | - 108 சங்காபிஷேகம் |
| நண்பகல் 12.00 மணிக்கு | - உச்சிகாலப் பூசை |
| பி.ப 12.15 மணிக்கு | - விசேட வசந்த மண்ட பூசை |
| பி.ப 1.00 மணிக்கு | - அம்பாள் அழகிய திருமஞ் சத்தில் வீதியுலா வருதல் |

கொரோனா (கோவிட் - 19) தொற்று காரணமாக வழி பாடுகளில் கலந்துகொள்ளும் அடியவர்கள் யாவரும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு. (C-1255)

## வேலை வாய்ப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். HOLDING LANKA நிறுவனமானது 2021 ஆம் ஆண்டிற்கான வேலை வாய்ப்பினை வழங்குகின்றது.

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்**

க.பொ.த சாதாரணதரம் / உயர்தரம்
18 - 30 வயதிற்குட்பட்டவர்கள்.

**அமைத்துத் தரப்படும் வசதி**

06 மாத கால பயிற்சி வழங்கப்படும்.
பயிற்சியின்போது 12,000 /- 20,000/-
பின் 60,000/- இற்கு மேல், பதவி உயர்வு.
ஆங்கில மொழியினை கற்றுக்கொள்ள வகுப்புகள். (5400)

**076 808 2241**

## வேலைக்கு ஆண்கள் தேவை

இல. 26/1, யாழ்ப்பாணம் செம்மா தெருவில் 01.01.2021 தொடக்கம் இயங்கி வரும் **சரவணபவன் பான்சி ஹவுஸ்** மொத்த, சில்லறை பான்சி வகைகள், பிளாஸ்ரிக் பொருட் கள், கவறிங் வகைகள், பாடசாலை உபகரணங்கள் சில்வர் பாத்திரங்கள், பட்டின் வகைகள் போன்ற விற்பனை நிலையத்துக்கு தகுதி உடைய ஆண்கள் தேவை.

(19 - 25 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது) (5401)

கரன்

**077 468 3354**

## வேலையாள் தேவை

வயோதிபப் பெண் ஒருவருக்கு உதவியாக தங்கியிருந்து சிறு உதவிகளைச் செய்யக்கூடிய பெண் பணியாளர் தேவை

ஆதரவு இல்லாதவர்கள் நிரந்தரமாக இருக்கக்கூடிய வசதியும் உண்டு

உணவு தங்குமிடம் என்பவற்றுடன் சம்பளம் ரூபா 20,000 வழங்கப்படும்

சம்பளமற்ற விடுமுறை எடுக்கலாம்

இடம் : வடமராட்சி - கரவெட்டி (C-1258)

**0779887538**

## திறப்பு விழா

அழைப்பு

பருத்தித்துறை மருதடியில்

புதுப்பொலிவுடன் புதிதாய் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் புதிய கடை



## விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்

திறப்பு விழா

எதிர்வரும் 2021 தைப்பூச நன்னாள் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.45 மணி முதல்

வாடிக்கையாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்.



பிரதான வீதி, மருதடி, பருத்தித்துறை.

☎-077 963 5447 (C-1257)

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள உணவகத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

- வரவேற்பாளர் (பெண்கள்)
- சமையலாளர் & பரிமாறுபவர்கள் (ஆண் & பெண்)
- கேக் ஐசிங் தெரிந்த பெண்கள்

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

25.01.2021 & 26.01.2021 மாலை 3 மணிக்கு சமுகம் தரவும்.

**SWEETPARK**

கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(புகையிரதக் கடவைக்கு அருகில்)
076 191 1884, 021 430 8743 (C-1249)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## HIGH LOOKS

TVEC Approved Certificate

INTERNATIONAL ACADEMY FOR COSMETOLOGY
Approved centre by Tertiary & Vocational Education Commission

வழங்கப்படும் கற்கைநெறிகள்

கொழும்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி கிளைகளில்

IVQ Level -2
NVQ Level -3, Level -4, Level -5, Level -6



## DIVINE LOTUS

அழகு நிலையம்

உயர் தொழில்நுட்ப சேவைகள் மங்கையர்களுக்கான பயன் உள்ள சேவைகள், பயிற்சிகள்.

மணப்பெண் அலங்காரம், பேசியல், கேக் ஐசிங், தையல், ஆரிவேக்.

ஆர்வம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை, சலுகைகள் உண்டு. (5386)

55, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(யாழ். பலகலைக்கழக மருத்துவபீடத்திற்கு அருகில்)
021 222 4240, 077 601 8563

விபரங்களுக்கு நேரில் வரவும்.

## விற்பனைக்கு

ME இலக்கமுடைய ஸ்கூட்டிப் பெப் சிவப்பு கலர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு. (5399)

தொடர்பு **077 203 0309**

## தவறிவிட்டது

அ.ஜெறி ஜோண்சன் (922790981V) என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம் யாழ்ப்பாணத்துக்கும் மானிப்பாய்க்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே:- **076 395 0539**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL (C-1167)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.